விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 26 புதன்கிழமை (09.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்காது

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணையகம் அண்மையில் ஜெனிவாவில் இயற்றியிருந்த இலங்கை மீதான தீர்மானத்தின் பிரகாரம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் முன்னெடுக்கக் கூடிய சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்காது என வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)


## இரணைமடுத் திட்டத்தின் பின்னால் அரசியல் ஆபத்துக்கள் உள்ளது

### விவசாய அமைச்சர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் ஏதோவொரு அரசியல் ஒளிந்து கொண்டிருக்கிறது. இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தின் பின்னாலும் அரசியல் உள்ளது. அரசின் இந்த நுண்அரசியல் ஆபததானது. இதனைச் சரியான முறையில் எதிர்கொள்ளாவிடில், குடிநீர்த் திட்டத்தின் நன்மைகளைவிடப் பாதிபபுகளையே நாம் அதிகம் எதிர்கொள்ள நேரிடும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் 19 ஆம் பக்கம் பார்க்க..

## அரிசியின் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

கொழும்பிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களிலும் அரிசியின் விலை 10 முதல் 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மரதகாமுல்ல மற்றும் பொலநறுவை ஆகிய பிரதேசங்களிலும் அரிசியின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவிக 20 ஆம் பக்கம் பார்க்க..


## தென்னாபிரிக்கப் பயணம் ஐ.நா.விசாரணையை பாதிக்காது

(கொழும்பு)

இலங்கை விவகாரம் பற்றிப் பேசுவதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தென்னாபிரிக்கா செல்வது, ஜெனிவா பிரேரணையைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள சர்வதேச விசாரணையை எந்த வகையிலும் பாதிக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க..

## புலிகளின் நிதியில் புதிய ட்றோலர் !

### கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் சாரதியாகப் பணியாற்றிய பின்னர், நாட்டை விட்டுத் தப்பியோடிய ஒருவரினால் அனுப்பப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ட்றோலர் படகு ஒன்றை 05 சந்தேக நபர்களுடன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர் என கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ட்றோலர் படகு பிரபாகரனின் ஒரு சகோதரரின கணக்கிலிருந்து 20 ஆம் பக்கம் பார்க்க..

## புனர்வாழ்வு பெற்றுவந்த இளைஞன் மீண்டும் கைது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் புனர்வாழ்வு பெற்று வசித்து வருகின்ற மேலுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையினைச் சேர்ந்தவரும் புனர்வாழ்வு பெற்றவருமான பத்திரிநாதன் அலமன்ரோ (வயது-30) என்பவரே ரி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலமன்ரோ, யாழ்ப்பாணம் பருத்தித்துறை முனை இறங்குதுறையல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களோடு மேலதிகமாக தேடப்பட்டு வந்த நபர் என பருத்தித்துறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் கிளிநொச்சிக்கு சென்று கொண்டிருக்கையில் கைது செய்யபபட்டு வவுனியா ரி.ஐ.டி அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பத்திரிநாதன் றெஜினோட் (47), பத்திரிநாதன் வின்சன் பெனடிக் (38), 19 ஆம் பக்கம் பார்க்க..

## பொது பல சேனாவுக்கு எதிராக முஸ்லிம்கள் முறைப்பாடு !

(கொழும்பு)

பொது பல சேனாவின் தற்போதைய நடவடிக்கைகள் கவலை தருவதாக குறிப்பிட்டு, இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்புக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பியுள்ளன.

அண்மைக் காலமாக பொது பல சேனா அமைப்பினர், முஸ்லிம் மக்கள் மீது பிரச்சினையை உருவாக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இலங்கை முஸ்லிம் கவுன்சில், இலங்கை ஜம்மத் இ-இஸ்லாமியா, அனைத்து இலங்கை ஜம்மத்துல் உலமா மற்றும் ஏனைய 12 முஸ்லிம் அமைப்புக்கள் இணைந்து இந்தக் கடிதத்தினை அனுப்பியுள்ளன.

சில நேரங்களில் பொது பல சேனா அமைப்பானது, முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் வடக்கில் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் பொது பல சேனா அமைப் 20 ஆம் பக்கம் பார்க்க..

Ranjanas
CERAMIC
For Quality Tiles & Sanitaryware
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
(C-6969)
Special Offer
SALE UP TO 30% OFF
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777



பங்களாதேஷில் நடைபெற்ற இருபது - 20 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணியினை வெற்றி கொண்டு சம்பியனாகிய இலங்கை அணி நேற்று நாடு திரும்பியது. மகத்தான வரவேற்பளிக்கப்பட்ட இலங்கை அணி வீரர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து வெற்றியினை பகிர்ந்து கொண்டனர்.

## நாளை முதல்...

தமிழகத்தின் பிரபல ஜோதிடர் ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் "புது வருட பலன்கள் உங்களுக்கு எப்படி" வாசிக்கத் தவறாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமலன் கொலை வழக்கு
# சந்தேக நபர்கள் 8 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போரின் போது அடித்துக் கொலை செய்யப்பட்ட யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் அமலனின் கொலை வழக்கின் சந்தேக நபர்கள் 8 பேரினையும் மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் பசீர் முகமட் உத்தரவிட்டுள்ளார்.

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் கடந்த மாதம் இடம்பெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஏற்பட்ட தகராறினால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களினால் யாழ். சென் பற்றிக்ஸ் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் மார்டின் வீதியினைச் சேர்ந்தவருமான ஜெயரட்ணம் அமலன் (வயது 24) என்பவர் அடித்து கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட அமலனின் கொலைக்கு காரணமானவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களினை பொலிஸாருக்கு அமலனின் சக நண்பர்கள் அடையாளம் காட்டியிருந்தனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட இளைஞர்கள் 8 பேரினை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் நீதவான் பசீர் முஹமட் குறித்த எண்மரையும் மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-4)

# இலங்கைப் பொருளாதாரம் 7.3 சதவீதத்தால் வளர்ச்சி

## மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் 7.3 சதவீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வங்கி தனது 2013ஆம் வருடத்துக்கான ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மை மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியுடன் 2013ஆம் ஆண்டில் வலுவான முறையில் மீளெழுச்சியுள்ள வேளையில் தொடர்ச்சியாக ஐந்தாண்டு காலங்களாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்ட பணவீக்கம் மேலும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்ததாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களித்ததுடன் சாதகமான வானிலை நிலைமைகளும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட படிப்படியான மீட்சியும் ஆண்டின் நான்கு காலாண்டுகளிலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உறுதியான உயர்விற்கு ஆதரவளித்ததாக மத்திய வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மத்திய வங்கியின் 64ஆவது ஆண்டறிக்கை ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவிடம் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கெப்ராலினால் கையளிக்கப்பட்டது. மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பாகிஸ்தான் ரயிலில் குண்டுவெடிப்பு

## 13 பேர் பலி

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் ரயில் மீது தீவிரவாதிகள் நேற்று மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ராவல்பிண்டி நோக்கி செல்வதற்காக வந்த ஜபார் எக்ஸ்பிரஸ் மீது ஷிபி ரயில் நிலையத்தில் வைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட அதிகளவானோர் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பெண் ஒருவர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் ரயில்வே மத்திய அமைச்சர் கவஜா ஷாட் ரபிக் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத குழுக்களும் இதுவரை உரிமை கோராத நிலையில், இம்மாகாணத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஆதிக்கம் காணப்படுவதால் அவர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாமென வெளிநாட்டு தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த ஒருமாத காலத்தில் பலுசிஸ்தான் மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் 30 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அண்மையில் பாகிஸ்தான் பாதுகாப்பு பிரிவு தெரிவித்ததை தொடர்ந்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-11)

# இலங்கை விவகாரத்தில் ஐ.நா தோல்வி

இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தோல்வி கண்டதனை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மீண்டும் ஒப்புக்கொண்டுள்ளார். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்ததனை தடுத்து நிறுத்த ஐக்கிய நாடு கள் அமைப்பு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ருவான்டா இனசுத்திகரிப்பு இடம் பெற்று 20 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். 2009-ம் ஆண்டு இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த தருணத்தில் ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும், அதனை தடுக்க ஐக்கிய நாடுகள்அமைப்பு உரிய பொறிமுறைமையை உருவாக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# வவுனியாவில் தமிழருவியின் தொடர் சொற்பொழிவு

(வவுனியா)

வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாம்பழத் திருவிழாவும் 12ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வருடப்பிறப்பன்று தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் மாலை 6 மணி முதல் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும் தமிழுலகம் நன்றிந்த சொற்பொழிவாளருமாகிய தமிழருவி த. சிவகுமாரன் நிகழ்த்தும் ஆலய வழிபாடும் ஆதிவிநாயகன் மகத்துவமும் என்னும் பொருளில் தொடர் தெய்வீகப் பேருரை இடம் பெற்றுவருகின்றது. மகோற்சவக் கிரியைகளை சிவாகம கிரியாஜோதி சிவஸ்ரீ சிவகுகநாதக் குருக்கள் நிகழ்த்தி வருகிறார். (ந)

# மோட்டார் திருடியவர் பொலிஸாரால் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமாரபுரம் பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து நீரிறைக்கும் மோட்டாரொன்றை திருடிய குற்றச்சாட்டில் கட்டடத் தொழிலாளி ஒருவரை கைது செய்ததாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவரிடமிருந்து அம்மோட்டாரை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

வீட்டு கட்டுமானப் பணியில் ஈடுபட்ட இவர் கடந்த சனிக்கிழமை இரவு மோட்டாரை திருடியுள்ளார்.

இத் திருட்டு தொடர்பில் முள்ளியவளை பொலிஸில் குறித்த வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரை கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர். (எ-250)

# கடன் தொல்லையால் விரக்தி இளம் வர்த்தகர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

அதிக கடன் தொல்லை காரணமாக வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரட்ணசிங்கம் நிறோஜன் (வயது 28) என்ற இளம் குடும்பஸ்தரே நேற்று அதிகாலை தற்கொலை செய்துள்ளார்.

இவரது சடலத்தை மீட்ட யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர். இவரது மரணம் தொர்டர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டதோடு பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த வர்த்தகர் அண்மையில் கடையொன்றை அமைத்து வந்ததாகவும் இதற்கென பல இலட்சம் ரூபா பணத்தினை அவர் முதலீடு செய்ததோடு அதிக கடன் பெற்றிருந்தார் என்றும் இதனால் மிகுந்த மனவிரக்தியில் காணப்பட்டார் எனவும் உறவினர்கள் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த வர்த்தகருக்கு ஒரு வயதேயான குழந்தையொன்று உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடன் தொல்லை காரணமாக பலர் தற்கொலை செய்துள்ளதோடு பல வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் மேலும் ஒரு வர்த்தகர் தற்கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை இராமலிங்கம்

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்து சபை உத்தியோகத்தர்- CTB)

96, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆலங்குளாய் வீதி, சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராமலிங்கம் அவர்கள் 07/04/2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை ரேவதிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற சின்னையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சிவராணியின் பாசமிகு கணவரும், புவனேஸ்வரி (கனடா), சீதாலட்சுமி, பாலிதராஜா (சுவிஸ்), சந்தானலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மதன்லால் ( ஜேர்மனி ), மீராலினி, நஜன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி ) லக்ஷனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெனி, தர்மரத்தினராசா, தர்ஷிகா, தயாளசீலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரஜீன், அஜய், ரவீனா, சரண்ஜன், ஜனோசன், அபினா, ஆரணி, ஹரிணி, இஷானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09-04-2014) புதன்கிழமை காலை 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. நஜன் (மகன்)
0775487486

18, ஆலங்குளாய் வீதி,
சண்டிலிப்பாய்.

(C-6976)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை தும்பளை றோட்டிற்கு அருகில் நி.ப (ஒன்று குளி 04) விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0774366704 (ச-6977)

**NORTH LEAD** COMPUTER & ACCESSORIES WHOLESALER

சகல விதமான கணனிகள் மற்றும் அதன் உதிரிப் பாகங்கள் விற்பனையிலும், பழுது பார்த்தலிலும் நம்பிக்கையான நிறுவனம்..

உங்கள் கணனிகளை ஒரே நாளில் உடனுக்குடன் பழுது பார்த்து பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 2GB Micro SD: 390 | USB Keyboard : 475 |
| 4GB Pendrive : 850 | Optical Mouse : 250 |
| 8GB Pendrive : 975 | 3.0GHz Processor: 7900 |
| 16GB Pendrive: 1475 | Motherbaord : 5800 |
| 7.2Mul.Dongle: 2450 | DVD Writer : 2675 |
| Webcam From : 700 | 500GB Hard Disk: 6850 |
| Headphone from: 250 | 19" LED Monitor: 11800 |

North Lead Jaffna Branch: 222 4459, 0774192275
Kilinochchi Branch : 021-206 0909, 0772533390

**வீடு விற்பனைக்கு**

இரண்டு பரப்புக்காணியில் அமைந்த வீடு சுண்டுக்குளிப் பகுதியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0776181216 (6449)

**காணி வீடு விற்பனைக்கு**

காரைநகர் வேதர்யடைப்பு - (ஆலங்கன்று வைரவர் கோயிலிலிருந்து தெற்கு பக்கம் றோட்டுக் கரையில் 2ஆம் காணி) பயன்தரும் தென்னை மரங்கள் பனை மரங்களும் கொண்ட 10 பரப்பு காணி கிணற்றுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0776030855 (6100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதுவருடத்தை முன்னிட்டு

# SISIL WORLD இன்

## சிறப்பு சலுகைகள்

வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
10வருடம் வரை உத்தரவாதம்
பண்டமாற்று கொடுப்பனவு
விசேட பரிசுப்பொருட்கள்



இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291

இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335

இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

(C-6968) நிபந்தனைகளுக்கு உட்பட்டது


## இணையத்தளத்தில் பார்வையிடலாம்

வடமாகாண ஆளுநர் அலு வலகத்தினரால் ஏற் பாடுசெய்யப்பட்ட மும்மொழி கற்கை நெறிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கான வகுப்புக்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆரம் பித்து வைக்கப்பட்டது.

இவ் வகுப்புக்களின் நேரம், பிரிவு ஆகியவற்றின் விபரங்களை WWW. np. Gov.lk என்ற இணையத் தளத்தில் பார்வையிட முடி யும் என்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் தெரி வித்துள்ளது.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 021223 1344 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (2)


## 'கும்பாபிஷேக பொன்விழா வேதவாரிதி' வாழி



சைவத் திருமண்ணில் 50 ஆவது கும்பாபிஷேகப் பெருவிழாவை யாழ்ப் பாணம் வடமராட்சி கல்லுவம் கரண வாய் மேற்கு பதியுறை திருவருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவிலாகிய எமது ஆலயத்தில் இன்றைய தினம் (09.04.2014) மிகச் சிறப்பாக நிறைவேற்றும் சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள் அவர்களுக்கு கும்பாபிஷேக பொன்விழா வேதவாரிதி எனும் பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிப் பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

**ஆலய பிரதம குருவும்**
**கல்லுவம் வாழ் இளைஞர்களும்**

(சி-6972)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சர்வானந்தம் ஹபில்குமார்



கிழக்கு பல்கலைக்கழகத்தில் 05.04.2014 அன்று நடைபெற்ற 18 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலை மாணிப் பட்டத்தைப் பெற்ற கற் கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த சர்வானந்தம் ஹபில்குமார் அவர்கள் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**இரத்தினவேலு குடும்பத்தினர்.**

(சி-6970)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1961 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 15<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L /விவசாயம<br>தொ.இ: B/1228 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 27.25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/1794 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 29.75<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MSc IT / Software Engineer (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/1229 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 32.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.com / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/1795 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 29.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 10ஆம் வகுப்பு/ நகைத் தொழில், சாரதி (சவுதி)<br>தொ.இ: B/1231 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 53<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc / தனியார் துறை வேலை<br>தொ.இ: G/1796 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 21.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: MSc /பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம், விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/1234 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 35.75 சூரி, செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MA /ஆசிரியர்<br>தொ.இ: G/1799 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில்


## ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(அனலைதீவு)

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதேசசபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் இறுதிக்கட்ட கலந்துரையாடல் அனலைதீவு வடக்கு ஜே/37, அனலைதீவு தெற்கு ஜே/38 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பிரதேசசபை உபஅலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாக எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை எழுவைதீவு ஜே/39 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு எழுவைதீவு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




# பாரம்பரிய விளையாட்டு விழா

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எல்.என்.ஆர்.கட்டுமான கம்பனியின் அனுசரணையுடன் பருத்தித்துறை திக்கம் மத்திய சனசமூக நிலையமும் திக்கம் இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும்.

இவ் விளையாட்டு போட்டியில் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்கள், திக்கம் மத்திய சன சமூக நிலைய அங்கத்தவர்கள், திக்கம் இளைஞர் விளையாட்டு கழக அங்கத்தவர்கள் மட்டும் பங்குபற்ற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# மதங்களுக்கிடையில் பிளவு ஏற்பட்டால் அபிவிருத்தி நோக்கி பயணிக்க முடியாது

## வடமாகாண சபை அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டால் அபிவிருத்தி நோக்கி பயணிக்க முடியாது என வடக்கு மாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இதனால் பத்து வருடங்கள் சென்றாலும் அபிவிருத்தியை எட்ட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ முகாமுக்கு அருகாமையில் அமைந்திருந்த பிள்ளையார் சிலை அண்மையில் உடைக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து அவர் நேற்று முன்தினம் மாலை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் பேசும் எமது உறவுகளுக்குள் உள்ள ஒற்றுமையை குழப்பும் விதமாக மதங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் சில விஷமிகள் செயற்படுவது இதனூடாக புலப்படுகின்றது. இதனை மக்கள் புரிந்து விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மதங்களு க்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவது தொட ருமேயானால் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் சென்றாலும் அபிவிருத்திகள் என்பதை விடுத்து வெறுமனே இவ்வாறான பிரச்சினை களை தீர்ப்பதிலேயே காலம் செல்லும்.

இதனைஎமதுதமிழ்பேசும்மக்களேபுத்திசாதுரியமாக அறிந்து விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம். எனவே இவ்வாறான கீழ்த்தரமான செயல்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

இந்த சம்பத்துடன் தொடர்புடைய வர்கள் அடையாளங் காணப்படுமிடத்து அவ ர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (2-4-266)




# வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கம் நடத்தும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தின் செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலகத்தின் கணக்காளர் என்.எஸ்.ஆர். சிவரூபன், நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்ட பணிப்பாளர் சு.சுரேந்திர நாதன், கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன், யாழ்/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# பொலிஸாருடன் முரண்பட்ட பெண்ணுக்கு பிணை

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரிடம் பெண் ஒருவர் முரண்பாடான நிலையில் நடந்து கொண்டதையடுத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கரவெட்டி மேற்கில் வசிக்கும் குறித்த பெண் நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்வதற்கு சென்ற போது பொலிஸாரின் முறைப்பாட்டுப்பதிவின் போது பெண் பொலிஸ் உத்தியோகத்தருடன் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதுடன் அடிக்கவும் முயன்றுள்ளார்.

இதனை அடுத்து பிரஸ்தாப பெண்ணை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-60)

# யாழ்.பல்கலை. மாணவனுக்கு ஆட்டோ வழங்கினார் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

போரின் போது தனது இரண்டு கால்களையுமிழந்த யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மூன்றாம் வருட மாணவன் சிவபாதம் பிரசாத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் ஆட்டோ ஒன்று நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

குறித்த மாணவனின் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடனும் அந்த மாணவனின் குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் வடக்கு மாகாண ஆளுநரின் நிதியிலிருந்து சுமார் 5 இலட்சத்து ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த ஆட்டோ வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் மற்றும் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டிருந்தனர். (2-6)

# சிறந்த விவாதியாக மாணவி தெரிவானார்

இலங்கைத் தமிழ் விவாதிகள் கழகத்தின் சார்பில் வருடந்தோறும் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்று வரும் மொழி முனை விவாதப் போட்டியில் யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரபாடசாலை மாணவி செல்வி சாம்பவி அருந்தவராசா யாழ்.மாவட்டத்தின் சிறந்த விவாதியாக தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 2 ஆம் திகதி அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் சான்றிதழை பெற்றுக் கொண்டார் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (2)

# கும்பாபிஷேகமும் கௌரவிப்பும்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கல்லுவம் கரணவாய் மேற்கு திருவருள் மிகு சித்தி விநாயகர் ஆலய நூதனபிரதிஷ்டா அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன் கிழமை காலை 8.20 மணிக்கு ஆலய பிரதம குரு சிவத்திரு ச.பாலசிறிஐயா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக நிகழ்வுகளை சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ண குருக்கள் நிறைவேற்றி வைப்பார். சைவத்திருமண்ணில் 50 ஆவது கும்பாபிஷேகத்தை நிறைவேற்றும் சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ண குருக்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அருளாசியுரையை ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் வாழ்த்துரையை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆசிரியரும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து பதினொரு நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகத்துடன் நிறைவடையும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய டெங்கு கட்டுப்பாடு வாரம் நடைபெற்றது.

இதில் மாநகர சபைக்குட்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் செயலகங்களில் பணிபுரியும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் சுகாதாரத் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலர்கள் முன்னேற்பாடுகளை மேற் கொண்டனர்.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்தியர்களின் வழிகாட்டலில் சுகாதாரப் பாதுகாவலர்கள், குடும்பலநல உத்தியோகத்தர்கள் GFATM தொண்டர்கள், பொது மக்கள், பாதுகாப்பு படையினர், பொலிஸார், கிராமத் தலைவர்கள் என பல தரப்பினரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது டெங்கு அபாயகரமான இடங்கள் பார்க்கப்பட்டு சுத்திகரிப்பும் செய்யப்பட்டது.

இவ்வாரத்தில் முதல் நாள் பொது வடிகால்களும் பொது இடங்களும் பார்வையிடப்பட்டு டெங்கு அபாயகரமான இடங்கள் அகற்றப்பட்டன.

இரண்டாம் நாள், அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் தனியார் நிறுவனங்களின் சுற்றாடல் சுகாதாரம் பார்க்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் அலுவலக மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களின் செயற்பாடுகளும் ஆராயப்பட்டது.

மூன்றாம் நாள், அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், முன்பள்ளிகள், தனியார் நிறுவனங்களின் சுற்றுச் சூழல் தரிசிக்கப்பட்டது.

நான்காம் நாள், தொழிற்சாலைகளும் வீட்டுத் தரிசிப்புக்களும் நிகழ்ந்தன.

ஐந்தாம் நாள், இந்து கிறிஸ்தவ, முஸ்லீம், பௌத்த மதத் தலங்களும் வீட்டுத் தரிசிப்புக்களும் நிகழ்ந்தன.

ஆறாம் நாள், கட்டட வேலைப் பகுதி தரிசிப்பும் ஏழாம் நாள் மயானங்கள் மற்றும் பொது இடங்களும் பார்க்கப்பட்டது.

இம்முறை சுகாதார தொண்டர்களுடன் செயலர் பிரிவிற்குட்பட்ட உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்பட்டனர் என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.(2)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக இருபது பயனாளிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதை படத்தில் காணலாம்.
(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சிவயோகர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சிவயோக சுவாமிகளின் 50 ஆவது ஆண்டு குருபூசை விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோவில் சிவயோகர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில் நந்தனன், இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி மா.அனந்தலெட்சுமி, திருமதி ர.நகுலா மற்றும் ஜே/114 கிராம சேவை அலுவலர் ஜெ.டினேஸ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# மஹாபொல புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 2011/2012 கல்வியாண்டின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கான அழைப்புக் கடிதங்கள் மாணவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் குடும்ப உறுப்பினர்களில் ஒருவரை அழைத்து வரலாம்.

மேற்படி புலமைப்பரிசில் பெறும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பார்வையிடலாம்.

புலமைப்பரிசில் பெறும் மாணவர்களை காலை 8.15 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# புதுவருட பஞ்சாங்கத்தை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப்பஞ்சாங்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிறக்கின்ற ஜய தமிழ் புது வருடப்பிறப்பை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பஞ்சாங்கத்தில் புதுவருடப் பிறப்புத் தொடர்பான சுப நேரங்கள், புதுவருடப் பலன்கள், மாத ரீதியான சுப நேர விபரங்கள், இந்துக்களின் விரதங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இப்புதிய பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது தபால் மூலம் பெற விரும்புவோர் சுய முகவரி எழுதப்பட்டு முப்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 25 X 17செ.மீ. அளவான கடித உறையை பணிப்பாளர் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1 காலி வீதி, கொழும்பு 4 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

கடித உறையை வைத்து அனுப்பும் வெளி உறையின் இடது பக்க மேல் மூலையில் பஞ்சாங்கம்-2014 எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (2)

# மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சோ.ப. மற்றும் ஜெறார்ட் றொபு ஷோன் ஆகியோரால் தமிழாக்கம் செய்யப்பட்ட ப்ளெய்ஸ் சென்ட்றார்ஸின் நெடும் பாவான சைபீரிய புகைவண்டி உறையும் ஃப்ரான்ஸைச் சேர்ந்த குட்டி ஜேனும் எனும் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புதிய கலைப்பீட மண்டப 207 ஆம் இல. அறையில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன், கௌரவ விருந்தினராக கலாநிதி அ.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

தாரணி சுந்தரலிங்கம், எல்.ரமணன் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்குவார்கள். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 110 | 120 | 100 | 100 |
| தக்காளி | 40 | 40 | 30 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 45 | 40 |
| கோவா | 25 | 20 | 30 | 40 |
| கரட் | 70 | 120 | 80 | 120 |
| பூசணி | 30 | 40 | 35 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 70 | 80-90 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 50 | 70 | 60 | 60 |
| லீக்ஸ் | 50 | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 |
| கத்தரிகம்புள்ள | 40 | 60 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 90 | 80 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45 | 35-40 |
| இராசவள்ளி | 70 | [illegible] | 90 | 70 |

# இராசி பலன்

09.04.2014
(பங்குனி 26, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
நவமி காலை 6.34 மணிவரை
பூசம் பிற்பகல் 1.43 மணிவரை
இராகுகாலம் 12.07-1.37 மணிவரை
சுபநேரம் 4.37-6.07 மணிவரை

**மேடம்** வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** மாமன்,மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயரும், தொழில் விருத்தியுண்டு.

**கடகம்** சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**சிங்கம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவர், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எதிர்பாராத பண வரவுகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி அதிக பிரஜாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, தொழில் முயற்சிக்கு பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், எடுத்த காரியத்தில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, போசன நன்மையுண்டு.

**மகரம்** பேச்சில் கனிவு பிறக்கும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம்கண்டு கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொழில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், சுவாரஸ்யமான நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மீனம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், போக விரும்பிய இடத்திற்கு செல்வதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை தமிழ் சமூகத்தை ஒடுக்கும் நோக்கில் தடைவிதிப்பு

## மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

மாற்று சிந்தனையாளர்களை ஒடுக்கும் நோக்கிலேயே இலங்கை அரசாங்கம் அமைப்புக்களை தடை செய்துள்ளதாக மனிதவுரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அண்மையில் 16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையம், 424 தனிப்பட்ட நபர்களையும் தடைசெய்து கறுப்புப் பட்டியலிட்டிருந்தது.

சிறுபான்மை தமிழ் சமூகத்தின் அமைதியான போராட்டங்களை ஒடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான தடைகள் விதிக்கப்படுவதாக மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலயப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வாழ் தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் சர்வதேச சமூகத்துடன் பேணி வரும் தொடர்புகளை துண்டிப்பதே இந்த தடையின் பிரதான இலக்கு.

தடை செய்யப்பட்டுள்ள பெருமளவிலான அமைப்புக்கள் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருபவை.

வெளிநாடுகளில் இயங்கி வரும் தமிழ் அமைப்புக்களை தடை செய்வதன் மூலம், இலங்கையிலுள்ள தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு அரசாங்கம் அச்சுறுத்தல் விடுத்து வருகிறது.

அமைதியான வழிகளில் மாற்றுச் சிந்தனைகளை வெளியிட முயற்சிக்கும் தரப்பினரை பயங்கரவாத பட்டியலில் இணைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# புலி உறுப்பினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் எனக் கருதப்படும் கபிலன் எனப்படும் நந்தகோபன் தற்சமயம் இலங்கை பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இருந்து மலேசியா தப்பிச் சென்ற நந்தகோபன் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி லண்டன் செல்ல முற்பட்ட வேளை மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் வழக்கு தொடரப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட நந்தகோபன் 6 மாதங்களுக்கு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறை தண்டனையின் பின்னர் மலேசிய அதிகாரிகள் நந்தகோபனை இலங்கைக்கு நாடு கடத்தினர்.

அதன்போதே அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நந்தகோபன் நெடியவன் குழுவின் இரண்டாம் நிலைத் தலைவர்களுள் ஒருவர் என தெரிவிக்கப்படுகிறது. (2)

# ஓய்வுபெற்ற தாதியர்களை மீண்டும் இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் சுகாதார அமைச்சுக்கு மீண்டும் இணைத்துக் கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கிழக்கு மாகாண யோசனைப்படி திருகோணமலை வைத்தியசாலையை மத்திய அரசுக்கு உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்விலஉரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடந்து கூறுகையில்,

சில இடங்களில் தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை அதிகரித்து வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பத்தாயிரம் தாதியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

வருடாந்தம் அதிக தாதியர் ஓய்வு பெறுகின்றமை மற்றும் வெளிநாடு செல்கின்றமை இதற்கு காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## புதையல் தேடிய பிக்கு விளக்கமறியலில்

(கொழும்பு)

புதையல் தோண்டிய சந்தேக நபரான பிக்குவை விளக்கமறியலில வைக்குமாறு ஹிங்குராங்கொடை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹிங்குராங்கொடை, பன்சல் கொடெல்ல புராதன பூமியில் புதையல் தோண்டி புராதனப் பொருட்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற சந்தேகத்தில் பொலிஸார் குறித்த பிக்குவை கைதுசெய்து ஹிங்குராங்கொடை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

பதில் நீதவான் ஏ.ஏ.நாலக பண்டார சந்தேக நபரான மேற்படி பிக்குவை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (2)

# இலங்கைக்கு ஆதரவு வழங்கிய வியட்நாமிற்கு நன்றி தெரிவிப்பு

ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய வியட்நாம் அரசுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

வியட்நாம் கொடுத்த ஆதரவுக்காக அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் பேராசிரியர் ட்ரென் டை குவேங்கிடம். ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மாணவ பருவத்தில், அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தினை ஆதரித்தமையினை இச் சந்திப்பின்போது நினைவு கூர்ந்தார்.

இதற்கிடையில், மீண்டும் வியட்நாமிற்கு வருகை தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பேராசிரியர் ட்ரென் டை குவேங்க் அழைப்பு விடுத்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள அமைச்சர், நேற்று முன்தினம் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய வினை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஹுலுகல்லவிற்கு தூதுவர் பதவி?

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன ஹுலுகல்லவிற்கு தூதுவர் பதவியொன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த ஹுலுகல்ல அண்மைக் காலமாக பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக ஹுலுகல்ல மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெண் வர்த்தகர் ஒருவருக்காக பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய அழுத்தம் கொடுத்தார் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் ஹுலுகல்லவிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ ஹுலுகல்லவை பகிரங்கமாக விமர்சனம் செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இரண்டு தடவைகள் ஹுலுகல்ல தூக்க மாத்திரை விழுங்கி உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்திருந்ததாக தெரிய வருகின்றது.

இவ்வாறான நிலையில் ஹுலுகல்லவிற்கு தூதுவர் பதவியொன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் இதுபற்றி அறிவிக்கப்பட்ட போதிலும் உத்தியோக பூர்வமாக குறிப்பிடப்படவில்லை என ஹுலுகல்ல தெரிவித்துள்ளார். (2)

# வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு சமுர்த்தி வங்கியும் வடமராட்சி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் வடமராட்சி கிழக்கு தாழையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ந.திரிலிங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் புத்தாண்டுச் சந்தை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.வடமராட்சி அமைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு இளைப்பாறிய நிர்வாக அலுவலர் த.கைலாசமூர்த்தி, மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, தாழையடி பங்குத் தந்தை அருட்தந்தை ம.ஜேசுரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தச் சந்தையில் உள்ளூர் உற்பத்தி பொருட்களும் ஏனைய பல பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதால் இதனை நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்துமாறு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (2)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 14.02.1926

உதிர்வு 10.03.2014

அமரர் திருமதி மாப்பாணபிள்ளை புவனேஸ்வரி

(வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்)

அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ எமது அன்பிற்கினிய அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு பரிவுடன் ஆறுதல் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் ஊடகங்கள் ஊடாக எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட் டோருக்கும் மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் உடன் வர முடியாமல் பின்னர் அறிந்து வீட்டிலி ருந்தே மனதால் அஞ்சலி செய்தோருக்கும் மற்றும் இன்று நடைபெறும் (09.04.2014) அந்தியேட்டி முதலிய பிரார்த்தனைகளில் இணைந்து கொள்ளும் உற்றார், உறவினர், அயலவர் மற்றும் ஏனையோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதார விந்தங்களை சென்றடையப் பிரார்த்திக்கும்

வன்னிவிளாங்குளம்,
மாங்குளம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(6055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சொற்பொழிவு

(வவுனியா)

வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ் வாய்கிழமை வரை தொடர்சொற்பொழிவுகள் தினமும் மாலை 6 மணி முதல் நடைபெறவுள்ளது.


இத் தொடர் சொற்பொழிவினை **ஆலய வழிபாடும் ஆதி விநாயகர் மகத்துவமும்** எனும் தொனிப்பொருளில் தமிழருவி த.சிவகுமார் நிகழ்த்தவுள்ளார்.

மஹோற்சவத்தின் இறுதி திருவிழாக்களான வேட்டைத்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை சப்பறமும் இடம் பெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)




# அபிவிருத்திக்காக காத்திருக்கும் குமுழமுனை மத்தி கிராமம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள குமுழமுனை மத்தி கிராமம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் இன்றும் வளப்பற்றாக்குறையுடனேயே உள்ளதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குமுழமுனை மத்தி கிராம மக்கள் யுத்தத்தினால் 5 தடவைகள் இடப்பெயர்வை சந்தித்து கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி மீள்குடியேறிய நிலையில் அங்கு 245 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

போரினால் 219 வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன் 26 வீடுகள் பகுதிச் சேதங்களுக்குட்பட்டதாயுமிருந்தன.

இந்நிலையில் இவ் வருடம் தான் இந்தியன் வீட்டுத் திட்டம் ஊடாக 128 நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் 91 புதிய வீடுகள் தேவையாகவுள்ளது.

அத்தோடு ஐ.ஓ.எம். நிறுவனம் 129 தற்காலிக வீடுகளையும் யு.என் கபிறற் (UNHABITAT) எனும் நிறுவனம் 9 பகுதிச் சேத வீடுகளையும் புனரமைத்து வழங்கியுள்ளது.

எனினும் 17 பகுதிச் சேத வீடுகளும் 46 தற்காலிக வீடுகளும் அமைக்கப்பட வேண்டும்.

இக்கிராமத்திலுள்ள 36 குடும்பங்கள் மலசலகூட வசதிகளின்றியும் 46 குடும்பங்கள் பாதுகாப்பற்ற கிணற்று நீரினையுமே பயன்படுத்தி வருகின்றன.

மேலும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. 16 வீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத சூழ்நிலையில் காணப்படுகின்றது.

1984 ஆம் ஆண்டு அரச பேருந்து சேவையில் ஈடுபட்ட போதும் தற்போது அச் சேவைகள் இடம்பெறவில்லை.

இங்கு விவசாயம் முக்கிய தொழிலாகவுள்ள நிலையில் 56 குடும்பங்கள் விவசாய காணிகளின்றியும் 15 குடும்பங்கள் குடியிருக்கக் காணி களின்றியும் உள்ளன.

அத்தோடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, கிராம சேவையாளர் பிரிவு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி திணைக்களம், ப.நோ.கூட்டுறவு சங்கம் போன்றன வற்றிற்கு காணிகள் உள்ள போதிலும் நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

கிராமத்திலுள்ள கணவனை இழந்த பெண்கள், தனியாக வாழ்பவர்கள் மாற்றுத் திறனாளிகள், முன்னாள் போராளிகள் போன்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகளும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலே காணப்படுகின்றது.

ஆகவே இவ் வளங்களை ஏற்படுத்தி கொடுத்து குமுழமுனை மத்தி கிராமம் முன்னேற்றம் காண சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)





பூநகரி கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்திறன் போட்டிகள் அண்மையில் பூநகரி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வினையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

# கிளி.மாவட்டத்தில் 400 ஏக்கரில் நிலக்கடலை செய்கை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, பூநகரி, பளை கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 400 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலை செய்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக கிளி.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி விவசாய திணைக்களத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான நிலக்கடலையை உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் மாகாண விவசாய அமைச்சின் ஊடாக வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு கிளி.விவசாய திணைக்களத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் போது கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பளை ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள ஆயிரத்து 230 பயனாளிகளுக்கு 16 ஆயிரம் கிலோ கிராம் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டன.

மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் 1/2 ஏக்கர், 1/4 ஏக்கர் என்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இம் மாவட்டத்தில் விவசாய திணைக்களத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி மிளகாய், வெங்காயம் செய்கை என்பவை ஊக்கமளிக்கப் பட்டு வருவதோடு, இதுவரை விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் 2 ஆயிரம் வரையிலான நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண் வெட்டிகள், தெளிகருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு மேற்கொள்ளப்பட்ட செய்கைகளில், திராட்சை செய்கைக்கென 23 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, தற்போது திராட்சை செய்கை அறுவடை மேற்கொள்ளக் கூடிய நிலையிலுள்ளது.

இச் செய்கையை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாழைச் செய்கையில் நல்ல பயன் கிடைத்தும் அவற்றை சந்தைப் படுத்தமுடியாத நிலையுள்ளதுடன், பப்பாசி செய்கையிலும் பருவம் தவறிய கால நிலையால் நல்ல பலனை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிளி.மாவட்டத்தில் 60ஆயிரம் ஏக்கர் வரையில் கால போக நெற்செய்கையும் 10 ஆயிரம் ஏக்கர் வரையில் சிறு போகச் செய்கையும் மேற்கொள்ளக் கூடிய வசதிகள் இம் மாவட்டத்தில் இருப்பதால் அதற்கு கேற்ப தரமான நெல்லினங்களும் விவசாய திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார். இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார், உலக உணவுத்திட்ட ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-254)

# கிளி.பொதுச்சந்தையில் இடம்பெறும் சட்டவிரோத வியாபாரம் நிறுத்தப்படும்

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்ந்தயை அண்டிய பகுதிகளில் சட்டவிரோதமாக இடம்பெறும் பழ வியாபாரத்தினை தடுத்து நிறுத்துமாறு கோரி, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளருக்கு பாதிக்கப்பட்ட சந்தை வியாபாரிகள் மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி பொதுச் சந்தையில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நாம், சந்தையை அண்டிய பகுதியில் பழ வியாபாரத்தினை முன்னெடுக்கும் ஆறு பேரினால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இவ்வாறாக குறித்த 6 வியாபாரிகளும் பழ வியாபாரத்தில் அன்றாடம் ஈடுபட்டு வருவதனால், பிரதேச சபைக்கு மாதாந்த வரி செலுத்தி வியாபார அனுமதி பெற்று சந்தையினுள் மேற்கொள்ளப்படும் எமது வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

சந்தைக்கு அருகாமையில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் இந்த 6 பேருக்கும் பிரதேச சபையினர் அனுமதி வழங்கியுள்ளனரா என்பது எமக்கு தெரியவில்லை.

எனினும் அன்றாடம் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்ற சந்தை பழ வியாபாரிகளின் நிலையை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நா.வை.குகராசாவை வினவிய போது, கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகாமையிலுள்ள 6 வியாபாரிகளுக்கும் பிரதேச சபை அனுமதி வழங்கவில்லை. இவர்கள் சட்ட விரோதமான முறையிலேயே வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது குறித்த வியாபாரிகளை அவ்விடத்தில் வியாபாரம் செய்யக் கூடாது என எச்சரித்து பிரதேச சபையூடாக கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன.

இந் நிலையில் தொடர்ந்தும் அவ்விடத்தில் வியாபாரம் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (9-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞாபக சக்தி!

...ரமேஷ் தனக்கு தானம் அளித்த செப்புக்காசின் மகிமையினால்தான் களவு போன பொருள் தனக்குத் திரும்பக் கிடைத்தது என்று கமேஷ்"க்குத் தோன்றியது.

தானும் அதுபோல் ரமேஷ்"க்குப் பௌர்ணமி அன்று தானம் செய்தால், அவன் நிச்சயம் லாபம் அடைவான் என்று தோன்றியது.

அதனால் காமேஷ் வேண்டுமென்றே பௌர்ணமியன்று ரமேஷ்"க்கு தானம் செய்யாமல் இருந்து விட்டான்.

இவ்வாறு ரமேஷ் ஒழுங்காக தானம் கொடுக்க, காமேஷ் ஞாபக மறதியினால் மறந்து விட்டதாக நடித்து வந்தான்.

ஆனால் ஒரு பௌர்ணமியன்று அயலூர் சென்றிருந்த ரமேஷினால் தன் நண்பனுக்கு செப்புக் காசு தானம் தர இயலவில்லை.

அன்று, தன் தோட்டத்தைத் தோண்டிய போது காமேஷ்"க்கு மண்ணில புதைந்திருந்த ஒரு பெட்டி கிடைத்தது.

பெட்டி நிறைய தங்க நகைகள் இருக்கும் என்று மனப்பால் குடித்துக் கொண்டே அதைத் திறந்த காமேஷ்"க்கு பயங்கர ஏமாற்றம் ஏற்பட்டது. பெட்டி நிறைய கூழாங்கற்கள்தான் இருந்தன. 'ஆகா! அமாவாசையன்று ரமேஷ் வழக்கப்படி தனக்கு தானம் செய்து இருந்தால், கூழாங்கற்களுக்கு பதில் தங்க நகைகள் கிடைத்திருக்குமே" என்று காமேஷ் புலம்பினான்.

ரமேஷ் தன் வீட்டில் புதிதாக ஒரு கிணறு தோண்டுவதைப் பற்றிய செய்தி காமேஷை எட்டியது.

பௌர்ணமியன்று தான் அவனுக்கு இந்த முறையாவது செப்புக்காசு தானம் செய்யலாமா என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது.

ஆனால், அதனால் அவனுக்கு கிணறு தோண்டப்போய் புதையல் கிடைத்து விடுமோ என்ற பயமும் தோன்றியது.

கிணறு தோண்டி முடிந்துவிட்டது என்று அறிந்த பின்னர், சாவகாசமாக ரமேஷின் வீட்டிற்குச் சென்ற காமேஷ், "நண்பா! இந்த பௌர்ணமி தினத்தன்றும் உனக்கு தானம் செய்ய மறந்து விட்டேன். இன்றுதான் ஞாபகம் வந்தது. இந்தா செப்புக்காசைப் பெற்றுக் கொள்" என்றான்.

கூடியிருந்த அனைவரும் என்ன விடயம் என்று புரியாமல் விழிக்க, ரமேஷ் யோகியின் வரத்தைப் பற்றி விளக்கினான். பிறகு, காமேஷை நோக்கி, "நண்பா! சென்ற முறை அமாவாசையன்று நான் ஊரில் இல்லை.

அதனால் உனக்கு தானம் தர முடியவில்லை" என்று கூறிவிட்டு சிறிது நேரங் கழித்து, "நான் உனக்கு ஒவ்வொரு அமாவாசையன்றும் தானம் அளித்து வந்தேன்.

அதனால் உனக்கு சில லாபங்கள் ஏற்பட்டன.

ஆனால் பதிலுக்கு எனக்கு தானம செய்ய வேண்டிய உனக்கோ அசாத்திய ஞாபக மறதி ஏற்பட்டுவிட்டது.

முதன் முறையாக, இப்போது தான் உனக்கு தானம் தர வேண்டும் என்ற ஞாபகமே ஏற்பட்டுள்ளது.


மனிதனுக்கு ஞாபக சக்தி மிக மிக முக்கியம்.


இதுவரை நீ பெற்ற லாபங்களை விட, இதுவே நீ பெற்ற மிகப் பெரிய நன்மை!

அதனால்தான், நான் இனி தானம் செய்யப் போவதில்லை" என்றான். சுற்றியிருந்தவர்கள் சிரிக்க, மறுபடியும் காமேஷின் மூகக்கு உடைந்தது.

(முற்றும்)







### சதாம் உசேன்

சதாம் உசேன் அப்த் அல்-மஜித் அல்-திக்ரிதி 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாவார். ஜூலை 16, 1979 இல இருந்து 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதிவரை அமெரிக்க தலைமையிலான ஈராக படையெடுப்பு வரையில் இவர் அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

ஈராக்கின் பாத் கட்சியின் முக்கிய நபரான சதாம் 2 1968 இல் அக்கட்சி நடத்திய அதிகார கைப்பற்றலில் முக்கிய பங்கு வகித்தார். தனது நெருங்கிய உறவினரான ஜெனரல் அகமது பாக்கரின் கீழ் துணை ஜனாதிபதியாகப் பணியாற்றிய சதாம், அரசுக்கும் ஆயுதப் படைகளுக்கும் இடையேயான பிரச்சினைகளை கடுமையாக அடக்கி ஆண்டு, அரசு இயந்திரத்தின் மீதான தன் கட்டுப்பாட்டை வலுவாக்கிக் கொண்டார்.

அதிபராகப் பொறுப்பு வகித்த சதாம், யதேச்சாதிகார அரசை நடத்தினார். ஈரான்-ஈராக் போர் (1980-1988) மற்றும் பெர்சியக் குடாப் போர் (1991) நடந்த காலங்களிலும் அதிகாரத்தை தன் கைப்பிடியில் வைத்திருந்தார். இக்காலகட்டங்களில் ஈராக் மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்ததோடு அவர்களின் மனித உரிமைகளுக்கும் பங்கம் ஏற்பட்டது. சதாமின் அரசு, விடுதலை அல்லது தன்னாட்சியை வலியுறுத்திய, இனம் அல்லது சமயம் சார் இயக்கங்களை மட்டுப்படுத்தியது.

மேலை நாடுகளிடம், குறிப்பாக ஐக்கிய அமெரிக்க மாநிலங்களிடம், அவர் காட்டிய எதிர்ப்பை மெச்சி, பல அரேபிய மக்கள் அவரை ஒரு பிரபலத் தலைவராகக் கருதினாலும், அனைத்துலக சமுதாயத்தினர் பலரும் அவரை சந்தேகக் கண் கொண்டே நோக்கினர். அதுவும் 1991 பெர்சிய குடாப் போருக்கு அடுத்து சில ஈராக் குழுக்கள் சதாமின் பாதுக்காப்பு படை குறித்த அச்சத்துடன் வாழ்ந்தனர்.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் மற்றும் அதன் கூட்டாளிகள் இணைந்து மேற்கொண்ட 2003 ஈராக் போருக்கு பிறகு சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. டிசெம்பர் 13, 2003 அன்று திக்ரித்துக்கு வெளியே உள்ள பாதாள அறை ஒன்றில் ஒளிந்திருந்த சதாமை அமெரிக்கப் படையினர் கைது செய்தனர். பல மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பாக இடைக்கால ஈராக் அரசு அமைத்திருக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சதாம் விசாரிக்கப்பட்டார். நவம்பர் 5, 2006 இல் அவருக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

டிசெம்பர் 26, 2006 இல் சதாமின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. டிசெம்பர் 30, 2006 உள்ளூர் நேரம் 06:05 மணிக்கு அவர் தூக்கிலிடப்பட்டார்.




- 1241 - மங்கோலியப் படைகள் போலந்து மற்றும் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி தோற்கடித்தனர்.
- 1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து மன்னனாக முடிசூடினான்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரொபேர்ட் லீ தனது 26,765 பேருடனான படைகளுடன் வேர்ஜீனியாவில் சரணடைந்ததில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நோர்வே, மற்றும் டென்மார்க் மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடுத்தது.
- 1953 - வார்னர் பிறதேர்ஸ் நிறுவனம் முதல் முப்பரிமாணத் திரைப்படமான "ஹவுஸ் ஒவ் வக்ஸ்" (House of Wax) இனை வெளியிட்டது
- 1959 - மேர்க்குரித் திட்டம்: ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர்கள் ஏழு பேரின் பெயர்களை நாசா அறிவித்தது.
- 1967 - முதல் போயிங் 737 பறப்பு.
- 1984 - யாழ்ப்பாணம் அடைக்கல மாதா கோயில் இராணுவத்தினரின் றொக்கட் தாக்குதலுக்கு உள்ளானது.
- 1991 - ஜோர்ஜியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1992 - முன்னாள் பனாமா ஜனாதிபதி மனுவேல் நொரியேகாவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதிமன்றம் 30 ஆண்டுகால சிறைத் தண்டனை அளித்தது.
- 1999 - நைஜர் ஜனாதிபதி இப்ராகிம் மைனசாரா படுகொலை செய்யப்பட்டார்.
- **2003 - ஈராக்கை அமெரிக்கக் கூட்டுப் படையினர் கைப்பற்றினர். சதாமின் 24 ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்தது.**

பிறப்புகள

- 1968 - ஜெய் சந்திரசேகர், அமெரிக்க நடிகர்

**இறப்புகள்**

- 1626 - சேர். பிரான்சிஸ் பேகன், ஆங்கில தத்துவவாதி (பி. 1561)
- 1959 - பிராங்க் லாயிட் ரைட், அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் (பி. 1867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....சூடம் ஏற்றி, மணி அடித்து அந்தப் பெரிய மகாலிங்கத்தைப் பக்தியுடன் வணங்கினோம். எங்களுடன் வந்த உமா கண்களில் கண்ணீர் கசிய மனமொன்றி உணர்ச்சியெல்லாம் ஒடுங்க வணங்கிக் கொண்டிருந்தது எங்களுக்கு என்னவோ போலாகி விட்டது. சற்றுநேரம் காத்திருந்து அவர் சுயநினைவுக்கு வந்ததும் அழைத்துக் கொண்டு திரும்பினோம்.

எந்த சுவாமிகளிடமும் மனமுருகி வழிபடாத நிலையில் இந்தப் பெரிய மகாலிங்கத்திடம் மட்டும் உமா அழுத வண்ணம் மனமுருகி வேண்டுவதற்கு ஏதாவது காரணமிருக்கிறதா?

"நிச்சயம் இருக்கிறது. பிறகு சொல்கிறேன், வாருங்கள் போகலாம்" என்றனர் உமாவும் அவருடன் வந்த விஜயாவும்.

இந்தப் பெரிய மகாலிங்க தரிசனத்திற்காக மட்டும் வந்த பக்த குழுவினர் நேரமாகிவிட்டதால் கீழிறங்குவதற்குத் தயார் நிலையில் இருந்தனர்.

குழுவினரோடு ஒருவராக வந்த இன்னொரு வழிகாட்டி தலைமையில் கீழிறங்கத் தயாரானது. பெரிய மகாலிங்கத்திற்கு எதிரே ஓடும் பாம்பாற்றைக் கடந்து இடதுபுறமாகப் பிரியும் பாதையில் சென்றால் அரைமணி நேரத்திலேயே சந்தன மகாலிங்கர் கோயிலை அடைந்து விடலாமாம்.

பாதை தெரியாத பாதை, ஒற்றையடிப் பாதையாக இருக்கிறதே என்று உள்ளே நுழைந்து விட்டால் கொஞ்ச தூரம் சென்றுவிட்டால் பிறகு வந்த வழியே திரும்புவதற்குக் கூட பாதை புரியாத அடர்ந்த காட்டுவழி.

சுமார் முப்பது நாற்பது பேர் கொண்ட குழு வழிகாட்டியின் தலைமையில் திரும்பிக் கொண்டிருந்தது.

சித்தர் பாடல்களில் அபூர்வமான மரங்களாகச் சொல்லப்படும் ஜோதி மரம், வெண்புனல் முருங்கை, நாகப் படக் கற்றாழை, தில்லை விருட்சம், நாகதாளிச்செடி, சிவந்தபுனல் முருங்கை இவைகளைக் காணவும், பேய் மிரட்டி செடிகள் காணப்படும் எமவனத்தையும் சித்தர்கள் ரசவாதம் செய்ததாகக் கூறப்படும் வாதமேட்டையும் பார்க்க விரும்பியதால் நாகராஜின் தலைமையில் எங்களது பயணம் மீண்டும் தொடர்ந்தது.

பெரிய மகாலிங்கத்துக்கு எதிரே நான்கு வழிப்பாதை பிரிந்ததில் எந்தப் பக்கம் போவது என்ற குழப்பத்தில் இருந்தபோது, வந்த வழியே திரும்பி நடந்தார். பெரிய மகாலிங்கரை மறுபடியும் வணங்கி நாகராஜை நாங்கள் பின் தொடர்ந்தோம்.



பெரிய மகாலிங்கம்

**பெரிய கறுப்பு**

இப்போது பாதையை மறித்து நிற்பது போல் எதிரே ஒரு வெள்ளைப் பாறை மேடையிடப்பட்டிருந்தது.

போகும் போது இதைக் கவனிக்கவே இல்லை.

இதுதான் வெள்ளைக்கல் முனீசுவரராம். இந்தப் பெரிய மகாலிங்கத்திற்குக் காவல் தெய்வமாம். இங்குள்ள பளிஞர்கள் இந்த முனீசுவரர்க்கு சிறப்புப் பூஜைகள் செய்வார்களாம்.

மலை பளிஞர்களின் குல தெய்வமாக இருக்கும் இந்த முனீசுவரர், பெரிய கறுப்பு என்றும் அழைக்கப்படுகிறார். பெரிய மகாலிங்கமும், பெரிய கறுப்பும் மலைவாசிகளான பளிஞர்களால் பூஜை செய்யப்படும் குலதெய்வங்களாகும்.

**எமவனம்**

தன்வந்திரி வனத்திலிருந்து வடக்கே வந்தால், நேரே கிழக்கே போகிற பாதைக்கு வந்து சேரும். அந்தப் பாதையி

## ஆன்மீகம் 87

லிருந்து தெற்கே போகிற பாதைக்குப் போனால் வடபக்கமிருக்கிற கானலுக்கு எமபுரம் கானலென்று பெயர்.

உதயகிரி சித்தர் குகைக்குக் கீழ்ப் பக்கம் வருகிற பாதை வழியே அம்பு விடு தூரம் போய், பின்பு வடக்கே போகிற பாதை வழியில் அரை நாழிகை தூரம் வந்தால், எல்லைக் குட்டமும் எமபுரம் கானலுமிருக்கிறது என்று கோரக்கர் வழிகாட்டினாலும் நாங்கள் சென்றதென்னவோ பளிஞர்கள் பயன்படுத்தும் புது வழியாகத்தான் இருக்கிறது. இந்த வழியை இங்குள்ள பளிஞர்கள் ஊஞ்சல் கறுப்பன் வழி என்று அழைக்கின்றனர்.

இந்தக் காட்டுக்குள் நுழைந்து விட்டால் வந்த வழி எது? செல்லும் வழி எது? என்பதே தெரியாத அளவு அடர்ந்த இருண்ட காடு. சூரிய வெளிச்சம் கொஞ்சம் கூட இல்லை. அந்தி சாயும் நேரத்தில் வெளிச்சமும் இல்லாமல் இருட்டும் இல்லாமல் இருக்குமே அம்மாதிரியான வெளிச்சச் சாயல்.

எல்லா திசைகளையும் நன்கு அறிந்த எமதர்மன் கூட இங்கு வந்தால் எந்தப் பக்கம், எந்த திசை இருக்கிறது என்று தெரியாமல் மிரளுவானாம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**06**

...எங்கள் ஊரில் எல்லோராலும் கவனிக்கப்பட்ட ஓர் உருவம்- குட்டையன்.

எல்லோரின் கண்களிலும் தவிர்க்க முடியாமல் விழுந்து, பிதுக்க முடியாத முடியாத உருவம் குட்டையன்.

அவரது உண்மைப் பெயர் எனக்குத் தெரிந்து எவருக்கும் தெரியாது.

ஆனால் குட்டையன் என்றால் குழந்தையும் அறியும்.

குட்டையன் என்பது காரணப் பெயர் அன்று.

அவர் நல்ல உயரம்; அளந்து பார்க்காமலேயே ஆறடி சொல்லலாம்.

தெருவில் காற்று கிழிகிற சத்தம் கேட்டால் குட்டையன் கைவீசி நடக்கிறார் என்று அர்த்தம்.

தெருவில் யாரேனும் ஓரஞ்சாய்ந்து ஒதுங்கிப் போனால் குட்டையன் வந்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

அதிகாலை ஐந்து மணிக்கு வாசல் தெளிக்கும் பெண்களை வம்பிழுத்துக் கொண்டே ஓர் உருவம் தேநீர் குடிக்க ஊருக்குள் போகிறதென்றால் அது குட்டையன் என்று அர்த்தம்.

நான் பார்த்த முதல் தொழுநோயாளி குட்டையன்தான்.

அந்த அறியாத வயதில்- உலகின் ரம்மியத்தில் மட்டுமே மனசுலயித்துக்கிடந்த பொழுதில், எனக்குள் ஓர் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் பரவவிட்ட உருவம் குட்டையன்தான்.

சாம்பல் பூத்த முகம்.

மீசை இருக்க வேண்டிய இடத்தில் மெல்லிய பூனை உரோமங்கள்.

தொட்டாற் சுருங்கியைப் போல் மடங்கிய காதுகள்.

வற்றிய குளத்தின் வண்டல்களாய் புண்பட்ட இடங்களில் தென்பட்ட வெடிப்புகள்.

இவைகள் எல்லாம் அந்தச் சின்னஞ் சிறுவயதில் என்னைத் திகைக்க வைத்தன.

ஊனம் ஒன்றும் பாவமல்ல. இந்த வியாதி ஒன்றும் சாபமல்ல என்ற

## குட்டையன்

விவரம் தெரியாத அந்த வெள்ளை வயதில் அந்த மனிதன் என் பார்வையிலும் மனசிலும் பிசுக்கடித்தது நிஜம்.

ஆனால் அந்த மனிதரிடம் நான் கடைசிவரை நேசித்தது அந்த கம்பீரம்.

தான் அப்படி ஒரு பிணியால் பீடிக்கப்பட்டவர் என்ற வருத்தமோ அந்த வியாதி தன் அங்கங்களைத் தவணை முறையில் தின்றுவிட்டது என்ற தாழ்வு மனப்பான்மையோ அவரிடம் எள்ளின் முனையளவும் இருந்ததில்லை.

தன்னைவிட்டுக் கொஞ்சம் தள்ளி நிற்கும் சமூகத்தில் ஊடுருவி ஊடாடி உறவு கொள்ளும் உத்தியை அவர் அறிந்து வைத்திருந்தார்.

யாருக்காவது ஐந்து பத்து தேவையென்றால் அவர் பையிலிருந்துதான் அவசரமாய் வெளிவரும்.

ஊருக்குள் வரும் விருந்தினர்களை சரலி மரத்தடியில் அவர் சந்தித்தால் கண்டிப்பாய்க் கலர் வாங்கிக் கொடுப்பார்.

எல்லோரையும் பேசவிட்டுக் கேட்பார்.

ஆனால் தமிழ் சினிமாவில் எப்போதும் கடைசியாய் வரும் பொலிஸ் மாதிரி அவர் கடைசியாய்த்தான் பேசுவார்.


குட்டையன் சுயமானவர்.

கடைசிவரை சொந்தக் காலில் நின்றவர்.

பீடி பற்றவைக்கத்தவிர அவர் பிறர் உதவி நாடியதில்லை.

சமூகத்தில் தனக்கு மறுக்கப்பட்ட ஒரு நாற்காலியை முனைந்து கைப்பற்றும் முனைப்பு இருந்தது அவருக்கு.

அந்த நாளில் ஆதி திராவிடத் தோழர்களை நிராகரித்த டீக் கடைகளிலும் கூட அவருக்கென்று ஓர்



ஓரம் உண்டு.

திரைப்படக் கொட்டகைகளிலும் முதல் வகுப்புக்கே அவர் முண்டியடிப்பார்.

கடலையின் மேல்தோலைக் கரையான்கள் அரித்து விட்டாலும் உள்ளேயிருக்கும் பருப்பு பத்திரமாய் இருப்பது மாதிரி- அங்கங்கள் சிதைந்து போனாலும் மனிதன் என்ற அந்தஸ்து சிதைந்து போகவில்லை என்ற கொள்கையில் குரங்குப் பிடியாய் நின்றவர் குட்டையன்.

மனதில் உற்சாகத்தின் பிரவாகம் ஓடிக்கொண்டிருக்கும்வரை உறுப்புக் குறை ஒரு மனிதனை ஊனப்படுத்தி விடுவதில்லை.

கையில்லை என்பது ஊனமில்லை.
பறவைகளுக்குக் கையில்லை.
காலில்லை என்பது ஊனமில்லை.
பாம்புக்குக் காலில்லை.

உண்மையில் ஊனம் என்பது உற்சாகமின்மைதான்.

அவலப்பட வேண்டிய ஊனம் அவநம்பிக்கைதான். (தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்த மருத்துவ அடிப்படையில் நீரின் உபயோகங்களும் சுகாதாரமும்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

கிணறுகள் அவற்றின் அமைப்பிற்கு ஏற்றவகையில் துரவு, பிள்ளைக்கிணறு, நடைபாவி எனப்படுகின்றது. பிள்ளைக்கிணறானது கிணற்றுக்குள் அமைக்கப்பட்ட சிறு கிணறு. இது அதிக ஆழமாயிருக்கும். இதில் எப்பொழுதும் நீர் வறளாமல் சுத்தமாகயிருக்கும். சில காலங்களில் நீர் அதிகப்பட்டு பிள்ளைக் கிணற்றை மூடிவிடுவதுண்டு.

**சுத்தமான கிணற்று நீரின் குணம்**

ஆசாரக் கூபத் தறலா லதிதாகம்

வீசாகச் சூடுபசிமெய்க்கான்தன்-மாசூலை

மெய்யுள் வலி சந்துளைப்புவீழ்

மயக்கஞ் சோபை பித்தம் பையவரும் மீளையும் பார்

அதாவது குற்றமில்லாத கிணற்று நீரால் மிகுதாகம், தேகச்சூடு, பசி, உடலழற்சி, சூலை, உடல்வலி, இடுப்பு குடைச்சல், மயக்கம், சோபை (வீக்கம்), பித்தம் இவை தீரும். அத்துடன் கிணறுகளை சுத்தமாகவும் ஆசாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

கிணற்றுக்கருகில் மரஞ் செடிகள் ஒன்றும் இருத்தல் கூடாது. ஏனெனில் அவற்றில் இலை முத லியன கிணற்றில் விழுந்து அழுகக்கூடும். இதனால் நீரில் கிருமிகள் தோன்றி நீர் அசுத்தமடைய லாம்.

ஆனால் எமது மருத்துவத்தின் படி கிணற்றை முற்றாக மூடிவிடக் கூடாது. சந்திர, சூரிய கிரணங்கள் படாதநீர் தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல.

இதனை சந்திரா தித்தர்வலி சாராதா நீர் புழுதுர்க்

கந்தமதி சேறு கனப்பிலையு-தீர்ந்தநீர்

தங்குசுவை யில்லாநீர் சாற்றுமிலை ஸ்நானபானங்களுக்கா காவுறினோ யாம்

சந்திர, சூரிய கிரணங்கள் படாமற் போனால் நீரில் கிருமிகள் உருவாகலாம் என்றும் இலை உதிர்ந்த நீர் ஸ்நானபானத்திற்கு தகுந்ததன்றும் அறிகின்றோம்.

அத்துடன் கிணறுகளுக்கு இடும் மூடியானது சூரிய சந்திர கிரணங்கள் ஊடுருவிச் செல்லத்தக்கதாயும் இலைகளை தடுக்கவல்லதாயும் இருக்க வேண்டும்.



இதற்கு நெருங்கிய கண்களுள்ள கம்பி வலை சிறந்தது. சூரிய, சந்திர ஒளி இவை உட்செல்ல இடம் கொடுக்கும்.

கிணற்றுநீர் அன்றி ஏனைய நிலவியல்புள்ள நீர் நிலைகளின் நீர் உவர்ப்புச் சுவை இல்லாது இருப்பின் பானத்திற்கு பயன்படுத்தலாம். இவ்விதம் உபயோகிக்கப்படுபவை ஊருணி எனப்படும். இந்நீர் நிலைகளை அசுத்தம் செய்யாது பாதுகாக்க வேண்டும். அவைகளில் குளித்தல், துணி துவைத்தல், பாத்திரங்களை கழுவுதல் ஆடு, மாடுகளை கழுவுதல் முதலியன கூடான. அவைகளின் கரைகளில் மலினங்கள் சேராமல் பாதுகாத்தல் வேண்டும். அருகில் இடுகாடு இருத்தல் கூடாது. (புதைத்தல் அல்லது எதிர்த்தல் கூடாது) ஓடை, கால்வாய் முதலிய விடங்களினின்றும் அசுத்தநீர் வந்து சேராது காக்கவேண்டும். பாசி, அல்லி, தாமரை முதலியன அந்நீர் நிலைகளில் சேராது தடுக்க வேண்டும். அவைகளுக்கு அருகில் மரஞ்செடிகள் இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் கடுக்காய், நெல்லிக்காய், தான்றி ஆகிய மரங்கள் குளக்கரையில் இருத்தல் நன்று. அவற்றின் கரைகளை மேடாக்கி மழை காலங்கள் அடித்துக் கொண்டு வரும் மலினங்கள் வீழாது தடுக்கலாம். குளங்களில் நீர் எடுத்து பயன்படுத்தும் போது படிகளில் இறங்கி நீரில் கால்கள் முட்டாமல் எடுக்க வேண்டும்.

நீரை பழுது செய்யக்கூடாது என்பதை தாயைப் பழித்தாலும் நீரைப் பழிக்காதே என்பதால் அறிக. அந் நீர் நிலைகளில் மீன் வளர்க்கலாம்.

நீரை அசுத்தம் செய்யக்கூடாது என்று ஊருணியின் முன் விளம்பரம் அமைக்கவேண்டும். இங்ஙனம் முற்காலத்தில் கல்வெட்டில்,

நீர் பிழைத்தனன் ஊர் பிழைத் தற்றான்

நெடுமுடி மன்னன் கடுஞ்சினம் கொள்வான்

என்று பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்நீரைக்காய்ச்சி வடிகட்டி குடிப்பது சிறந்தது என்றும் நீரை எக்காலத்திலும் நன்றாகக் காய்ச்சி அருந்தலே நோயில்லா நெறிக்கு ஏற்றதென்றும் இதை

நீரைக்குறுக்கி என்று கூறுவதால் அறியலாம்.

*நில இயல்புள்ள ஆற்றுநீர்*

*ஆறில்லா ஊருக்கழகுபாழ்*

என்றபடி ஆற்றுநீர் சிறந்ததும்கூட. இவைகளுக்கு நீர் மழைகளின் மூலமாகவே கிடைக்கின்றது. மலைப் பிரதேசங்களிலும் மேடான பூமிகளிலும் பெய்யும் மழையானது பள்ளப் பிரதேசங்களில் ஓடைகளாகவும் ஆறுகளாகவும் ஓடுகின்றன. இவைகளின் நீர் மழையை பொறுத்திருக்கும். ஆற்றுநீர் எப் பொழுதும் ஓடிக்கொண்டே இருப்பதால் நீரிலுள்ள மலினங்கள் சுழலப்பட்டு கரையோரங்களில் ஒதுக்கப்படுவதால் நீர் சுத்தமடைய வசதி ஏற்படும்.

**ஆற்றுநீரின் குணம்**

ஆற்றுநீர் வாத மனலங் கபத்தோடு

தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே- ஊற்றுமிகுந்

தேகத்தி னோயையெல்லாஞ் சீறித் துரத்திவிடும்

போகத்திற்றாது வுமாம் போற்று

ஆற்றுநீர் வாதம், பித்தம், கபம் என்னும் முத்தோஷங்களையும் சாந்தம் செய்யும். தாகத்தை நீக்கும், தேகத்திற்கு வன்மை தரும், நோயையெல்லாம் விரைவில் நீக்கும். தாது விருத்தியையும் ஏற்படுத்தும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

குளம்- குளங்களுள் ஊற்றுள்ள குளங்களும் ஊற்றில்லாத மழையினால் நிரப்பப்படும் குளங்களும் உள்ளன. இவற்றுள் ஊற்றுக் குளத்தில் எப்போதும் நீர் ஓடிக் கொண்டே இருப்பதால் அசுத்தம் அதிகம் சேராது. இதனை

....மாற்றுங் குள மேலியாதியில்லை... என்றும்

எனினும் ஊற்றிருக்கும் குளத்து நீர்கூட வியாதிதரக்கூடும். ஏனென்றால் இந்நீர் ஒரே இடத்தில் தங்கியிருக்கிறது. இவ்விதம் தங்கி யிருக்கும் நீரால் குடல் வாதரோகம் உண்டாகும். அன்றியும் பிரமேகம், சீதளத்தையும் உண்டாக்கும். இதனை

... மாறாக் குளமே வியாதியுண்டு...

*(தொடரும்)*

# மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தின் சாயம் வெளுக்கத் தொடங்கி விட்டது

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

**எதிர்வரும் ஊவா மாகாண சபை தேர்தலில் மகத்தான வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சி பெறும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த நாட்டில் நடைபெற்று வரும் ஊழல் ஆட்சிக்கு மக்கள் முற்றுப் புள்ளி வைக்கும் காலம் நெருங்கிவிட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

சிங்களப் புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு என்பது அவசியமானதாகவுள்ளது. எனவே, பாதைகளை, கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதாகக் கூறும் அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உடனடியாக குறைக்க வேண்டும்.

நடந்து முடிந்த மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர். யுத்த வெற்றி என்று கூறிக்கொண்டு 5 வருடத்திற்கு மேலாகவும் மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தின் சாயம் தற்போது வெளுக்கத் தொடங்கி விட்டது. தேர்தல் முடிவுகள் தெளிவாக அதனைக் காட்டுகின்றன.

நாம் அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய கோரிக்கையை விடுக்கின்றோம்.

சிங்களப் புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருக்கின்ற இக்கால பகுதியில் மக்களின் அத்தியாவசிய பொருட்களின் விலைகளையாவது குறைக்க வேண்டும். குறிப்பாக பருப்பு, கருவாடு, நெத்தலி, உருளைக்கிழங்கு, சீனி போன்ற பொருட்களின் விலையை உடனடியாக குறைக்க வேண்டும். இல்லையெனில் புது வருடக் கொண்டாட்டங்களில் கூட ஈடுபட முடியாத அளவு மக்கள் பட்டினி கிடக்க நேரிடும். எனவே, அரசாங்கம் யோசித்து செயற்பட வேண்டும்.

தயட்ட கிருல கோஷம், யுத்த வெற்றி என்று மக்களை ஏமாற்றி இனி அரசாங்கத்தினால் மாயாஜாலம் காட்ட முடியாது. மக்கள் இனியும் ஏமாறமாட்டார்கள். அரசாங்கத்தின் முகத்திரையை மக்கள் விரைவில் கிளித்தெறிவர். ஊவா மாகாண தேர்தல் அதனை பறைசாற்றும்.

மேலும், எமது மேதினம் இம்முறை அம்பாறையில் நடைபெறவுள்ளதென்றும் அவர் தெரிவித்தார். (2)

## சத்தியப்பிரமாண நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

ஜே.வி.பியின் மேல்மாகாண சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஆளுநர் அலவி மௌலானா முன்னிலையிலேயே இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தில் நேற்றைய தினம் அவசரக் கூட்டமொன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டதால் சத்தியப்பிரமாண நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கு அமையவே நேற்றைய சத்தியப்பிரமாண நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்கும் குணம் கொண்ட 05 ஆம் எண்காரர்களின் குணாதிசயங்கள் 05

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்த எண்காரர்களுக்கு அநேகமாக இளம் வயதிலேயே திருமணம் நடந்து விடும்.

அப்படி இல்லையேன்றால் காலதாமதமாகத்தான் அது நடபெறும். இந்த எண்காரர்களின் வாழ்வில் திடீர் திடீர் என்று மாற்றங்கள் ஏற்படுவதனால் தான் இந்த திகதியில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று சொல்லப்படுகிறது. கூட்டு எண் 5 ஆகவோ திகதி, எண் 5 ஆகவோ உள்ள தினங்களில் திருமணம் செய்து கொண்டால் செய்து கொள்கிறவர்களின் தாம்பத்திய வாழ்வில் எதிர் பாராத பிரச்சினைகள் ஏற்படும்.

இந்த எண்காரர்களுக்கு அநேகமாக காதலில் தோல்விதான். எல்லா எண்களிலும் மிகவும் சிறப்பான எண் எது என்று கேட்டால் 5 ஆம் எண் தான் என்று பலரும் சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன்.

ஆனால் இந்தக் கருத்துக்கு நான் உடன்பாடு இல்லாதவன்.

என்னுடைய ஆய்வுகளின் படி இந்த எண்காரர்களின் வாழ்வில் தான் திடீர் திடீரென்று பிரச்சினைகள் ஏற்படும். இதனால், இவர்களின் வாழ்வில் எதிர்பாராத திருப்பங்களும் ஏற்படும். காதலித்து ஏமாற்றுகிறவர்களில் சிலரும் இந்த எண்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

சில 5 ஆம் எண்காரர்கள் நினைப்பதைப் போல, கன்னாபின்னாவென்று நான் இப்படி எழுதவில்லை. நிறையவே 5 ஆம் எண்காரர்களை ஊடுருவிச் சென்று ஆராய்ந்த பிறகுதான் இப்படி எழுதுகிறேன்.

5 ஆம் எண்காரர்களிடம் நிறையவே நல்ல குணங்கள் இருந்தாலும், சில 5 ஆம் எண்காரர்களிடம் நான் குறிப்பிட்ட இந்த ஏமாற்று விடயம் இருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாகக் காதல் விவகாரங்களில்.

இந்த எண்காரர்களின் சில நடவடிக்கைகளினால் இவர்களின் குடும்பத்திற்கு கெட்ட பெயர் ஏற்படும் வாய்ப்புகளே அதிகமாக இருக்கும்.

சாப்பாட்டு பிரியர்களாக இருக்கும் இவர்களில் அநேகமானவர்கள் மாமிச வகைகளை உண்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். கர்வமும் தலைக்கணமும் இவர்களிடம் கொஞ்சம் அதிகமாகவே இருப்பதால், இவர்களுக்கு எவ்வளவு தான் நண்பர்கள் இருந்தாலும் உதவி என்று வந்துவிட்டால் இவர்களை விட்டுவிட்டு மெல்ல நழுவி விடுவார்கள்.

கண்மூடித்தனமான சில பழைய பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் துணிந்து மீறும் இவர்கள், அவை மண்மூடிப் போக வேண்டும் என்று சொல்லுவார்கள்.

இதன்னால், பலருடைய வெறுப்புகளுக்கும் இவர்கள் ஆளாக வேண்டியிருக்கும். ஆனாலும், அதைப் பற்றியெல்லாம் இவர்கள் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

ஜோதிடக்களம்

இந்த எண்காரர்கள் குழந்தைகளுடன் பழகும் போது குழந்தைகளாகவே மாறிவிடுவார்கள். அதே போல, வாலிபப் பருவத்தினரோடு பழகும் போது புரட்சிகரமான கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

அதேநேரம் கல்வி மான்களோடு பழகும் போது, இவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும் நடந்து கொள்வார்கள். இந்த மாதிரியான மாறுபட்ட கோணங்களில் தங்களை மாற்றிக் கொண்டு பழகும் குணம், திறமை இந்த எண்காரர்களிடம் மட்டுமே உண்டு.

ஆனாலும் இவர்களிடம் இருக்கும் திறமையைப் பயன்படுத்தி தங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று முயற்சி செய்ய மாட்டார்கள்.

இந்த எண்காரர்களில் சில ஆண்கள் சூதாட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனாலும் அதனால் அவர்களுக்கு இலாபத்தைத் தவிர நட்டமே ஏற்படும். இவர்கள் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதால் இவர்களின் நரம்புகள் பலவீனப்பட்டிருப்பதால் வயிற்றுப் புண், தலைவலி போன்ற நோய்களால் இவர்கள் அடிக்கடி பாதிக்கப் படுவார்கள். இவர்களுக்கு திடீரென்று விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதால், இந்த எண்காரர்கள் மிகவும் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த எண்காரர்கள் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதை கட்டுப்படுத்திக் கொண்டு வாழப்பழகினால் இவர்களுக்கு ஏற்படும் இந்த நோய்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அதேபோல், தங்கள் வேலைகளுக்கு மத்தியிலும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது. இந்த எண் கொஞ்சம் பலவீனமான எண் என்பதனால் சில சமயங்களில் இவர்கள் தங்களுக்கு பொருத்தமில்லாத வேலைகளில் அல்லது வியாபாரத்தில் மாட்டிக் கொண்டு அதிலிருந்து வெளியேற முடியாமல் மிகவும் சிரமப்படுவார்கள்.

இவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் ஏற்பட்டாலும் எதற்கும் அஞ்சாமல் அதற்கு முகம் கொடுப்பார்கள். 14,23,32,50,59 போன்ற வயதுகளில் இவர்களின் வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்படும்.

பொறுமையும் நிதானமும் கடைப்பிடிக் காத இவர்கள் எந்தத் துறையிலும் வேகத்தை தான் விரும்புவார்கள். மற்றவர்கள் ஆழ்ந்து யோசிக்கும் சில விடயங்களுக்கெல்லாம் இவர்கள் பட்டென்று கூறும் தீர்வைப் பார்த்துவிட்டு பலரும் வியப்படைவார்கள்.

அதேநேரம் கஷ்டப்படாமல் சுலபமாக பணம் தேடும் தொழில்களையே இவர்கள் கண்டுபிடிப்பர். சிலசமயங்களில் இவர்கள் நெளிந்து கொடுக்கும் இயல்பு பிறரிடத்தில் வியப்பை ஏற்படுத்தும். அதே சமயம் எவ்வளவு தான் அடிபட்டாலும் மீண்டும் துள்ளியெழுந்து விடும் இவர்களின் துணிவைக்கண்டு எதிரிகள் கூட அசந்து போவார்கள்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இதனால் பல சிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள். முகஸ்துதியை அதிகம் விரும்பும் இவர்களை புகழ்ந்து பேசி எந்த விதமான காரியங்களையும் சாதித்துக் கொள்ளலாம்.

இன்பமோ, துன்பமோ எந்த விதமான சம்பவமாக இருந்தாலும் அது சிறிது நேரத்திற்குத்தான் இவர்களைப் பாதிக்கும். அதன் பிறகு, சாதாரணமாக எப்போதும் போல் தங்கள் காரியங்களில் ஈடுபட்டு விடுவார்கள். மாறுதல்களைக் கண்டு அஞ்சாத தன்மைதான் இதற்குக் காரணம் என்று சொல்லலாம்.



*மாடிப்படி உங்கள் வீட்டு முன் கதவுக்கு முன்னால் இருக்கிறதா? அப்படி இருந்தால் உடனடியாக உங்கள் வீட்டு நுழைவாயிலில் அழகான கண்ணாடி மணிகளைத் தொங்க விடுங்கள். அல்லது வீட்டுக்கு முன்கதவில் துளைகள் உள்ள திரைச்சீலை (ஸ்கிரீன்)யை தொங்க விடுங்கள். உங்கள் வீட்டில் சேமிப்பு அதிகரிக்கும், சோர்வும் களைப்பும் வராமல் இருக்கும்*

இவர்களிடம் இருக்கும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் என்ன வென்றால்,

அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்பதை இவர்களே அறிய மாட்டார்கள். இந்த எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் இவர்களது இந்தக் குணத்தை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். இல்லையென்றால் தாம்பத்திய வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படும்.

எப்போதும் கவர்ச்சியாக இருக்க விரும்பும் இவர்கள் அலங்காரப் பிரியர்களாகவே இருப்பார்கள். அடிக்கடி வண்ண வண்ண உடைகளை மாற்றி தங்களை அலங்கரித்து கொள்வார்கள். அதேபோல் வாசனைப் பொருட்களை பாவிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டி வருவார்கள்.

இவர்களில் சிலருக்கு மனதில் உள்ளதை மறைக்கத் தெரியாது. மனதில் உள்ளதையெல்லாம் அப்படியே கொட்டிவிடுவார்கள். இவர்களுடைய காதல் விவகாரங்களைக் கூடமறைக்க மாட்டார்கள்.

45 வயதில் இவர்களின் உடல் நிலை மிகவும் மோசமாக பாதிக்கக் கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம். இதிலிருந்து இவர்கள் தப்பிவிட்டால், எண்பது வயது வரையில் எந்தவித நோய் நொடியும் இன்றி வாழலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே சொல்லப்படிருக்கும் பலன்கள் சில ருக்கு பொருந்தாமல் இருந்தால் அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

இந்த எண்ணை ஆட்சி செய்யும் புதன் கிரகத்தின் ஆதிக்கம் குறைந்திருப்பதுதான்.

அப்படியானவர்கள் வாழ்க்கையில் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பார்கள். வாயைத் திறந்தால் பொய்தான் பேசுவார்கள்.

அடுத்தவர்களை ஏமாற்றி வாழ்வார்கள் அடுத்தவர்கள் செய்யும் தீய காரியங்களுக்குத் துணை போவார்கள்.

இந்த நிலை மாறவேண்டுமானால் இவர்கள் கிரகப்ரீதி செய்து வரவேண்டும்.

பெரும்பாலும் இந்த எண்காரர்களுக்கு புத்திரபாக்கியம் குறைவாகவே இருக்கும். சிலருக்கு குழந்தைகளே இருக்காது. ஆனால் வருகின்ற துணையின் எண் சக்தி வாய்ந்ததாக இருந்தால் இந்த நிலையில் மாற்றம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது.

குறிப்பாக முதலாம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் இதற்கு விமோசனம் கிடைக்கும். அதேநேரம் இவர்களது பிறந்த திகதியில் ஒன்றிற்கு மேற்பட்ட 5 ஆம் எண்கள் வந்தால் இவர்களின் வாழ்வில் மன அமைதி என்பது இருக்காது.

இந்த எண்காரர்களுக்கு ஒரு முறையாவது அம்மை நோய்கண்டு விடும். இவர்கள் நரம்புகளுக்கு பலம் தரக்கூடிய உணவு வகைகளை உண்ண வேண்டும். நெய், பால் இவைகளையும் அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். அதேபோல் அத்திப்பழமும் மிகவும் நல்லது.

இவர்களுக்கு பகையான எண்கள் என்று சொன்னால், அது 3, 7ஆம் எண்கள்தான். இந்த இரண்டு எண்களும் 50% வீதம் நட்பு எண்ணாகும். 4,22,31 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுக்கு வியாபாரக் கூட்டாளிகளாக இருப்பது நல்லது. சிவப்பு, பவளம் போன்ற நிறங்கள் இவர்க ளுக்கு அதிர்ஷ்ட நிறமாகும். வைரம் இவர்களுக்கு அதிர்ஷ்டமான கல்லாகும்.

# புலம்பெயர் தமிழ்மக்கள் நாடுதிரும்ப விரும்பாமைக்கு அரசே காரணம்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் நாடு திரும்ப விரும்பாமைக்கு இலங்கை அரசாங்கத்தின செயற்பாடுகளே காரணம் என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் பற்றீசியா ஏ புட்டினஸ், இலங்கை அரசாங்கத்திடம் தெரி வித்திருந்ததாக, விக்கி லீக்ஸ் தெரி வித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தினால் வோசிங்டன் தலைமையகத் துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய கடிதம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. புட்டினீஸ் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி, உதவி இரா ஜாங்க செயலாளர் றொபேரட் ஓ பிளேக்கின் வலியுறுத்தலுக்கு அமைவாக இலங்கை வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித போகொல்லாகமவை சந்தித்துள்ளார்.

இதன் போது சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை, எம்.டி.வி வலையமைப்பின் மீதான தாக்குதல மற்றும் அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் இலங்கைக்கு எதிரான பொருளாதார தடையை விதிக்க முற்படுவதாக கூறிய, பாலித கோஹன்னவை [illegible] காட்டி பாதுகாப்பு அமைச்சில் வெளியடப்பட்டிருந்த அறிக்கை போன்ற விடயங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் வெளி நாடுகளுக்கு பிழையான சமிக்ஞைகளை அனுப்புவதாகவும், அதனாலேயே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் இலங்கைக்கு வந்து, அபிவிருத்திகளுக்கு ஒத்துழைக்க மறுக் கின்றனர் என்றும் புட்டினீஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக போகொல்லாகம [illegible] தாக கூறப்படுகிறது. (2)

# தடுப்பு முகாமிலுள்ள தாயாரை பார்வையிட விபூசிகாவிற்கு அனுமதி

பூஸா தடுப்பு முகாமில் வைக்கப் பட்டுள்ள ஜெயக்குமாரியை அவரது மகள் விபூசிகா சென்று பார்வையிடுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளளது.

கடந்த 31ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் சிறுமி விபூசிகா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாயாரைச் சென்று பார்ப்பதற்கும் வீட்டிற்குச் சென்று அவரது உடைமைகளை எடுத்து வருவதற்கும் சிறுமிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இதனையடுத்தே நீதவான் இந்த அனுமதியை வழங்கியுள்ளார். அதன்படி சிறுவர் நன்னடத்தை அதிகாரி, மகாதேவா சிறுவர் இல்ல தலைவர் மற்றும் பொலிஸார் ஆகியோர் சிறுமியை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அத்துடன் தாயாரைப் பார்ப்பதற்கு தேவை யான ஆவணங்களையும் தமது பகுதி கிராம சேவையாளரிடம் இருந்து விபூசிகா பெற்றுக் கொண்டுள்ளார்.

இராணுவத்தினராலும் பொலிஸாராலும் தேடப்பட்டுவரும் கோபி என்கின்ற சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13ஆம் திகதி ஜெயக்குமாரியும் விபூசிகாவும் தர்மபுரத்தில் உள்ள அவர்களது வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைத் தண்டிக்குமா அமெரிக்கா?




ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய சில நாட்களில், கொழும்பில் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒரு பாதுகாப்புக் கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடமும், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் கூட்டுப்படைத் தலைமையகமும் இணைந்து ஒழுங்கு செய்த- Tempest Express 24 என்ற இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கு கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் கலதாரி விடுதியில் நடந்து வருகிறது.

இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் இலங்கை மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள்தான் அதிகளவில் பங்கேற்றுள்ளனர்.

இவை தவிர, சுமார் 15 நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகளும் கண்காணிப்பாளர்களாக இதில் பங்கேற்கின்றனர். இதனை ஒன்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்புக் கருத்தரங்கு என்று கூற முடியாது. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வது பற்றிய ஒரு பயிற்சிப் பட்டறைதான் இது.

ஆயுத தளபாடங்கள் பற்றிய விளக்கங்களுக்கோ, போர் உத்திகள் பற்றிய ஆலோசனைகளுக்கோ இதில் இடமில்லை. எல்லாமே, அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் சார்ந்த பயிற்சிகளும் விளக்கங்களும் -தான். ஆனாலும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து அமெரிக்கா நடத்தும் இந்தக் கருத்தரங்கை பலரும் வியப்புடன் நோக்கியது ஆச்சரியமானதே.

இலங்கையுடன் அமெரிக்கா ஜெனிவாவில் மோதல்; கொழும்பில் கூடல் என்று ஊடகங்களில் வெளியான செய்தி, பலரது கண்களையும் கவர்வதற்கான தலைப்பாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதனூடாகச் சொல்ல முனைந்த செய்தியின் பரிமாணம் யதார்த்தத்துக்கு முரணானது.

அதாவது ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்கா, இலங்கையுடன் இணைந்து பயிற்சி நடத்துகிறது என்பதன் ஊடாக, அமெரிக்கா இரட்டை வேடம் போடுவதான கருத்தை உருவாக்க ஊடகங்கள் பலவும் முயன்றதைக் காணமுடிகிறது. ஆனால், அமெரிக்காவை சரியாக விளங்கிக் கொள்ளாதவர்களுக்கே அது ஆச்சரியமானதாகவோ அதிர்ச்சியானதாகவோ இருந்திருக்கும்.

ஏனென்றால் இலங்கையுடன் அமெரிக்கா மோதல் போக்கை கடைப்பிடிக்கிறது என்பதோ, அத்தகைய நிலைக்கு இட்டுச் செல்ல முனைகிறது என்பதோ தவறான கருத்து. இலங்கையை தன் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொள்வது என்பது அமெரிக்காவினது தந்திரோபாயமே தவிர, அதனை விட்டு ஒதுங்கி நிற்பதோ, அதனை தனது நிழலில் இருந்து விரட்டி விடுவதோ அமெரிக்காவினது இலக்கு அல்ல.

அமெரிக்காவினது இந்த இலக்கினை சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி, ஐ.தே.க., முஸ்லிம் காங்கிரஸ் போன்றன தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளன என்பதை, ஜெனிவா தீர்மானம் தொடர்பாக அவை வெளிப்படுத்தியுள்ள கருத்துகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

அதாவது, ஜெனிவா தீர்மானம் என்பது இலங்கை என்ற நாட்டுக்கு எதிரானது அல்ல என்றும் அது இலங்கை ஆட்சியாளர்களுக்கு மட்டுமே எதிரானது என்றும் இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன. இந்தியப் பெருங்கடலில், கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ள இலங்கைத் தீவை தனது விரோதியாக்கிக் கொள்வதற்கு அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது.

அந்த உண்மையை கொழும்பு அரசியல் கட்சிகள் மத்தியில் அமெரிக்கா நன்றாகவே தெளிவுபடுத்தியிருக்கிறது என்பதை, ஜெனிவா தீர்மானத்துக்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் பெரும் எதிர்ப்புத் தோன்றாததை வைத்தே உணர முடிகிறது.

இந்த விளக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா கடுமையாக பணியாற்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், சிங்களத் தேசியவாதத்தை தட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாகவே இலங்கை அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை பயன்படுத்த முனைந்தது.

இத்தகைய சூழலிலும் கொழும்பு அரசியல் கட்சிகள் மத்தியில் அமெரிக்கத் தீர்மானத்தை சரியாக விளங்கிக் கொள்ளும் நிலை காணப்பட்டது. இது அமெரிக்காவுக்கு சாதகமானதொரு விடயம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கையிடம் எதிர்பார்ப்பது நிலையான அமைதிக்கும் நல்லிணக்கத்துக்குமான சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளைத்தான். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தக்க நிலையில் இந்த அரசாங்கம் இல்லாத காரணத்தினால்தான் அதனை தன் வழிக்குக் கொண்டு வருவதற்கு பல்வேறு வழிகளையும் கையாள முற்படுகிறது. அதில் ஒன்றுதான் ஜெனிவா ஊடாக கொடுக்கப்படும் அழுத்தம்.

அமெரிக்கா மற்றும் மேற்குலகினது கரிசனைகளைக் கருத்திலெடுத்து, அவற்றின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்குமேயானால், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகளை விடவும் இலங்கைக்கு வலுவான கவசமாக அமெரிக்கா மாறிவிடும். ஆனால், அரசாங்கம் வேறுவிதமாக சிந்திக்கிறது. மேற்குலகினது எதிர்பார்ப்புக்கமைய நடந்துகொள்ள முனைந்தால் அது தனது காலடிக்குக் கீழ் குழி தோண்டுவதற்கு சமமாகி விடும் என்று அது கருதுகிறது.

போர் நடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூற வைக்கும் சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுப்பதானது, ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை படுகுழிக்குள் தள்ளிவிடும். எனவேதான், அமெரிக்கா பக்கம் சாயாமல் சீனா, ரஷ்யாவின் நிழலில் நிற்க விரும்புகிறது இலங்கை அரசாங்கம். அதற்காக இலங்கையைத் தண்டிக்கும் அளவுக்கு அமெரிக்கா முடிபுகளை எடுக்கவோ, நடவடிக்கைகளில் இறங்கவோ இல்லை.

இப்போது ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் கூட இலங்கையைத் தண்டிப்பதற்கானது அல்ல, இலங்கைக்கு உதவுவதற்கானதே என்று அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் திரும்பத் திரும்பக் கூறுவதை அவதானிக்கலாம்.

இலங்கை அரசாங்கம் நிராகரிக்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக் கொண்டு, அது இலங்கைக்கே பயனளிக்கும் என்று மேற்கு நாடுகள் கூறுவது சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால், உண்மை அதுதான்.

அதாவது, இலங்கைக்கு எதிரான எந்த நகர்வையும் இந்த தீர்மானம் வெளிப்படுத்தவில்லை. ஆனால், இது இலங்கை அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒன்று. இலங்கை அரசு என்பது வேறு. அதை நிர்வகிக்கும் அரசாங்கம் என்பது வேறு.

இலங்கை அரசை நிர்வகிக்கும் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு இந்த தீர்மானத்தினால் பாதிப்பு ஏற்படலாம் என்ற போதிலும் அது இலங்கை அரசுக்கு நன்மையையே அளிக்கும் என்பதே மேற்குலக கருத்தாக உள்ளது. அதாவது நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றினால் அது இலங்கையின் எதிர்காலத்துக்கு சாதகமாக அமையும் என்றே மேற்குலகம் கருதுகிறது. ஆனால், அரசாங்கமோ அது தமக்குப் பாதகமாக அமையும் என்று அச்சம் கொள்கிறது.

இதனால்தான் அமெரிக்காவுடன் அது முட்டி மோதுகிறது. ஆனாலும், அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளைத் துண்டிக்கும் அளவுக்குச் செல்ல முனையவில்லை. அதனால்தான் எந்தச் சிக்கலுமின்றி கொழும்பில் பாதுகாப்புக் கருத்தரங்கை நடத்தி வருகிறது அமெரிக்கா. இதுமட்டுமன்றி வேறும் பல பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டங்களையும் அமெரிக்கா நடைமுறைப்படுத்தி வருகிறது.

பசுபிக் கட்டளைப் பீடமே இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது- கண்காணிக்கிறது. எனினும், ஜெனிவா தீர்மானத்துக்கு முன்னதாக வடக்கில் மூன்று பாடசாலைகளை முழு அளவில் வசதிகளைக் கொண்டதாக புனரமைக்கும் திட்டம் ஒன்றை பசுபிக் கட்டளைப்பீடம் முன்வைத்திருந்த போதிலும் அதை அமைச்சரவை நிராகரித்திருந்தது. ஆனால் பின்னர் அரசாங்கம் அந்த திட்டத்தை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முன் வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்போதும் கூட, அமெரிக்கா- இலங்கை பாதுகாப்பு உறவுகளுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலான எந்த சம்பவமும் நிகழ்ந்துவிட்டதாகக் கூறிவிட முடியாது. ஆனால், இந்த நிலைமை நிரந்தரமானது என்று உறுதிப்படுத்த முடியாது.

ஏனென்றால், ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் இடமளிக்க மறுத்தால்- அதாவது சர்வதேச விசாரணைக் குழுவை அனுமதிக்க மறுத்தால், இலங்கை மீதான பிடியை மேற்குலகம் இறுக்க வேண்டியிருக்கும். அது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பில் விரிசல்களைக் கொண்டு வரலாம்.


ஆனால், முடிந்தவரைக்கும் அமெரிக்கா அத்தகைய உறவுகளைத் துண்டிக்காமல் வேறு வழிகளிலேயே இலங்கையை வழிக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கும். ஏனென்றால், இலங்கையின் கேந்திரத் தன்மையின் முக்கியத்துவத்தையும் அதன் மீதான பிடியையும் அமெரிக்கா அவ்வளவு இலகுவாக விட்டுக் கொடுத்துவிடாது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ஏழு மாதங்கள் இலங்கைக்கு சோதனைக்காலம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



எதிர்வரும் ஏழு மாதங்கள் இலங்கைக்கு சோதனைக்காலம். சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும், சதிகாரர்கள் கத்தியை தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள் எனவே, மாகாண சபைகளில் எமக்குக் கிடைத்த வெற்றியை இதற்கெதிராகப் பயன்படுத்தி எம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 7 மாதங்கள் எமது நாட்டுக்கு சோதனைக் காலமாகும்.

வெளிநாடுகள் எமது நாட்டுக்குள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை ஏற்படுத்தி ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்க முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

அதேபோன்று உள்நாட்டிலும் அடிப்படைவாத சக்திகள் வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு துணை போகின்றன.

நாட்டிற்குள் பிரச்சினைகளை ஏற்படுத்தி குழப்பகரமான சூழலை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

எனவே உள்நாட்டு, வெளிநாட்டு சதிகாரர்களிடம் இருந்து நாட்டைப்பாதுகாக்கவேண்டும்.

இந்த சவாலுக்கு சிறப்பான முறையில் நாமும் முகம் கொடுக்க வேண்டும்.

அதிகாரிகள் பொய் கூறாது. உண்மையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அரசியல்வாதிகள் தடம்புரண்டு விடுவார்கள்.

அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு வழங்கும் தகவல்களில் உண்மை இருக்க வேண்டும் இதனையே நான் எதிர்பார்க்கின்றேன் என்றார். (2)

# நாட்டின் தலைமை பதவிக்கு மைத்திரிபால பொருத்தமானவர்

## மகுடம் சூட்டுகிறார் சந்திரிகா

(கொழும்பு)

நாட்டின் தலைமைத்துவ பதவிக்கு மிகவும் பொருத்தமான நபர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பணத்தை கொடுத்து விலைக்கு வாங்க முடியாத நபர். அவர் இந்த நாட்டின் தலைமை பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எதிர்கால ஜனாதிபதி பதவிக்கான நபரை தயார்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

இதனடிப்படையில், மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ, அனுரபண்டாரநாயக்க ஆகியோருக்கு சந்தர்ப்பம் வழங்கினேன்.

அதனை மகிந்த ராஜபக்ஷ மட்டுமே பயன்படுத்திக் கொண்டார்.

மைத்திரிபால சிறிசேன கட்சியின் நலனை கவனத்திற கொண்டு சிந்தித்து செயற்பட்டவர் எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார். (2)

# போர்வெற்றியை எல்லாக்காலங்களிலும் பயன்படுத்திக் கொள்ளமுடியாது

## பெரேரா எம்.பி.தெரிவிப்பு

போர் வெற்றியை எல்லாக் காலங்களிலும் பயன்படுத்திக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தலில் அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளதாக எவரேனும் தெரிவித்தால் அது முற்று முழுதான நகைச்சுவையே. ஏனெனில் அரசாங்கத்தின் வாக்குகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

வாக்களித்தவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கையை கவனத்திற கொண்டால் இந்த உண்மை வெளிப்படும்.

அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள கடுமையான எதிர்ப்பே



இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அநேக சந்தர்ப்பங்களில் போர் வெற்றியைப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தல்களில் வெற்றியீட்டியது.

எனினும், இந்த வெற்றிகளை ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமே அனுபவித்தனர்.

தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கம் பின்னடைவை சந்திக்கும். ஏனெனில் அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷவை விடவும் தற்போது உள்ள மஹிந்த மீதான மக்கள் அபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# தங்க உருண்டைகளை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

தங்க உருண்டைகளை சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்ல முயன்ற நபர் ஒருவர் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் வைத்து கைது செய்யப்பட்டு ள்ளார்.

257 கிராம் நிறையுடைய 10 தங்க உருண்டைகள் இந்நபரிடமிருந்து கைப்பற்றியதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 12 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா என தெரிவித்துள்ள சுங்கத் திணைக்களம் குறித்த சந்தேகநபர் தங்கக்கட்டிகளை ஆசனவாயில் மறைத்து சென்னைக்கு கடத்த முயற்சித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெறுகினறன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## முதல் வணக்கம்

கம்பர் ஒரு காவியம் எழுதினார்.

அது எவ்வளவு அழகானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனாலும் அவர் எழுதியதை எடுத்துச் சொல்லும் விதம் இருக்கே அதுவும் ஒரு தனி அழகு தான்!

கம்பராமாயண சொற்பொழிவில் கேட்ட ஒரு விளக்கத்தைத் தான் நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

கம்பன் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று யூகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ராமர்–சீதா கல்யாணம் முடிந்தவுடன் மண மேடையிலிருந்து ராமருடன் சீதாப்பிராட்டியும் எழுந்து வந்து கொண்டிருக்கிறார்கள். மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம் கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம்.

அதாவது சீதையை கல்யாணம் பண்ணிக் கொண்ட இராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்? என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீதை பின் தொடர இராமர் மண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக ராமரும் சீதையும் போகிறார்கள்.

சரி.... தசரதருக்குத் தான் முதல் நமஸ்காரம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் அவரைத் தாண்டி அப்பால் செல்கிறார்கள்!

அடுத்ததாக இருந்தது கோசலை.

அதனால் தாயாரைத் தான் முதலில் வணங்க வேண்டும் என்று நினைக்கிறார் போல! என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால் இவர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

அடுத்ததாக குலகுரு வசிஷ்டர் உட்கார்ந்திருக்கிறார்.

முதலில் குருவணக்கம் தான் என்று நினைக்கிறார் போல என்று நினைத்தார்கள். அதுவும் தப்பாக போய் விட்டது. இராமர் வசிஷ்டரையும் வணங்காமல் அப்பால் போகிறார்.

இதைப்பார்க்கிறார் விஸ்வாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் பெருமிதம்.

அவர்களுக்கு கல்யாணம் பண்ணி வைத்ததே நாம் தானே! அதனால் நம்மிடம் தான் முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று வருகிறார்கள். போல என்று நினைத்தார் விஸ்வாமித்திரர்.

ஆனால் அவரும் ஏமார்ந்து விட்டார். அவரையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

சரி... அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகிறார்கள்?

தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். இருவரும் போய் அவரது காலில் தான் விழுந்து வணங்கினார்கள்.

யார் அந்த அம்மா?

அவர் தான் கைகேயி! இராமரின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர்.

கம்பர் தன்னுடைய இராமாயணத்தில் இராமர் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார்.

அதை மட்டும் வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை அழகுபடக் கூறி அதற்கு ஒரு அர்த்தமும் சொல்லியிருக்கிறார் அந்தப் பேச்சாளர்.

இந்த நிகழ்வு

இராமன் கைகேயியைப் பார்த்து இப்படி சொன்னது மாதிரி இருந்ததாம்!

"என் அவதாரத்தின் இரகசியம் உனக்குத் தெரியும்! சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போக வேண்டும் அதைக் காரணமாக வைத்து இராவணவதம் நடக்க வேண்டும். அதனால் என் பங்கை நான் செய்து முடித்து விட்டேன். சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். இனி மேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும்! எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்குத் தான் உனக்கு முதல் வணக்கம்!"

என்று சொன்னது மாதிரி இருந்ததாம்.

எழுதிய ஒரு விடயத்தை எவ்வளவு அழகாக எதுத்துச் சொல்லியிருக்கிறார் பார்த்தீர்களா?

எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்.

இருவரும் ஒரே அறையில் தங்கி சொந்தமாகச் சமைத்து சாப்பிட்டுக் கொண்டு இருப்பவர்கள்.

அதில் ஒருவனுக்கு சமையல் தெரியும். இன்னொருவனுக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. அவனைப்பார்த்து இவன் "ஏன்டா... உனக்கு கல்யாணம் முடிந்தவுடன் யாருக்கு முதல் நமஸ்காரம்?" என்றான்.

"முதல் நமஸ்காரம் உனக்குத் தாண்டா" என்றான் மற்றவன் "ஏன் அப்படிச் சொல்கிறாய் ?" என்று கேட்டான் அவன்.

" நீ சமைத்ததை கொஞ்ச நாளாகவே சாப்பிட்டதால் தான் சீக்கிரமாகவே கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்று தோன்றியது.

"இந்த கல்யாணத்துக்கு காரண கர்த்தாவே நீதான்.

அதனால் உனக்குத் தான் முதல் மரியாதை" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழினத்தின் மீதான அடக்கு முறையே புலம்பெயர் அமைப்புக்களின் மீதானதடை

## வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடிவரும் புலம்பெயர் தமிழர் அமைபபுக்கள் மீது விதிக்கப்பட்ட தடையானது ஒட்டு மொத்த தமிழர்கள் மீதான இன ஒடுக்குமுறையின் இன்னொரு சாட்சியாகும் எனவும் மீண்டெழுந்து வரும் தமிழினத்தின் மீதான அடக்குமுறையே எனவும் வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இது மட்டில் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், இது குறித்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் எத்தனை தடைகள் இடையூறுகள் வரினும் தொடர்ந்து போராடுவோம்.

இலங்கையில் காலம் காலமாக தமிழர்கள் கடும் இன அடக்குமுறைக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான காலப் பகுதியில், இலங்கை அரசானது தமிழர்கள் மீது தமது அரசியல் கட்டமைப்புக்கள் மூலம் மேற் கொண்ட இன ஒடுக்குமுறை வடிவங்கள் எண்ணிலடங்கா.

தெற்கில் எத்தகைய அரசு அமைந்த போதிலும் தமிழர் மீதான இன அழிப்பில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை. தனித்துவமான தேசியஇன அடையாளக் கட்டமைப்புக்களை தமிழர்கள் கொண்டிருந்தமையே இவ் அனைத்து அடக்கு முறைகளுக்குமான காரணமாகும்.

இந்நிலையில் போருக்குப்பிந்தைய காலகட்டத்தில் ஜனநாயக வழியில் போராடும் தமிழர்களின் குரல்கள் நசுக்கப்படுகின்றன.

வன்முறைப் பாதையை மௌனித்து ஜனநாயக வழியில் தமது உரிமைகளைக் கேட்கும், மக்கள் மீது தொடரும் அடக்குமுறைகள் உலக நீதி முறைமையை கேள்விக்குள்ளாக்குகிறது.

தாயகத்தில் பெண்கள், மீதான அடக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன. இளைஞர்கள் மீது தொடரும் கைது அச்சுறுத்தல்களால் இடப் பெயர்வு நிர்ப்பந்தம் திணிக்கப்படுகிறது.

போருக்கு பின்னரான காலப்பகுதியில் தொடரும் உச்சக்கட்ட அடக்குமுறையாக, புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மீதான தடை விளங்குகிறது.

ஜனநாயக அமைப்புக்கள் மீதான இத்தடைகளைக் கண்டிக்கவும் தாயகத்தில் தலைவிரித்தாடும் இன அடக்குமுறையை தடுத்து தமிழர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சர்வதேசம் விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றுள்ளது.

இதேவேளை, ஈழத்தமிழர் இனப்பிரச்சினையிலும், இலங்கை அரசியல் விவகாரங்களிலும் முழு ஈடுபாட்டுடன் அதி தீவிரமாக புலத்திலிருந்து செயற்பட்டு வரும் தமிழ் அமைப்புகளையும், தமிழர்களையும் இலங்கை அரசு தடைசெய்துள்ளமையானது இன நல்லிணக்கத்துக்கு ஏற்புடையதல்ல என 16 தமிழ் அமைப்புகளையும், 424 தமிழர்களையும் இலங்கை அரசு தடைசெய் துள்ளமை தொடர்பில், வட மாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களையும், புலத்திலுள்ள தமிழ் அமைப்புகளையும் தமிழர் தாயக பகுதிகளில் முதலீடுகளை செய்யுமாறும், முதலீடுகளை செய்ய முன் வருபவர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்க தாம் எப்போதும் தயாராகவே இருப்பதாகவும் கடந்த காலங்களில் கூறி வந்தஇலங்கை அரசு, ஜெனீவா தீர்மானத்துக்குப்பின்னர் சடுதியாக தமிழர்களையும், தமிழ் அமைப்புகளையும் தடைசெய்துள்ளமையானது வெளிவிவகார கொள்கைகளில் அரசின் அனுபவமும், முதிர்ச்சியும் அற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. ஜெனீவாவில் மட்டுமல்ல, வெளிவிவகார கொள்கைகளிலும் இலங்கை அரசு தோல்வியடைந்திருக்கிறது.

போர் முடிவுக்குப்பின்னர் சர்வதேச நாடுகள் உட்பட புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரும் தமிழர் தாயக பகுதிகளில் இலங்கை அரசு அவசர அவசிய மறுவாழ்வு மற்றும் மீள் கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும், சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு இனப்பிரச்சினை விவகாரத்துக்கு ஏற்புடைய தீர்வையும் முன்வைக்கும் என்றும் எதிர்பார்த்தனர்.

மிகவும் முக்கியமான இந்த கடமைகளை மகிந்த அரசு செய்ய தவறியதால் தம் தாயக பூமியை அழகுபடுத்தும் தம் உறவுகளை சுய பொருளாதார ரீதியாக மேலெழுந்து வரச்செய்து விடும் முயற்சிகளில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் அதன் பங்காளிகளும் மிகவும் கரிசனை கொண்டு தீவிரமாக செயலாற்றி வந்தனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் இங்குள்ள எமது உறவுகளுக்கு நாளாந்த வயிற்றுப்பிழைப்புக்காக அனுப்பப்படுகின்ற சிறு தொகை நிதியைக்கூட கேள்விக்கு உட்படுத்துகின்ற ஒரு அபாயகரமான சூழலை இலங்கை அரசு வலிந்து ஏற்படுத்தியுள்ளது. இந்த செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

எமது மண்ணின் இருப்புக்காக, எமது மக்களின் நல வாழ்வுக்காக புலத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற சிறு அளவு பொருள் மற்றும் நிதி வள உதவிகளை கூட கிடைக்க விடாமல், இத்தடை உத்தரவு மூலம் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

இன நல்லிணக்க முயற்சிகளிலும், தமது தாயக பிரதேச அபிவிருத்திகளிலும், தமது உறவுகளின் மறுவாழ்விலும் தமிழர்கள் தாம் பங்களிப்பு வழங்க முடியாத இருண்ட யுகத்துக்குள் அழைத்துச்சென்றுள்ள மகிந்த அரசு,இதற்கான பலனை மிக விரைவில் அனுபவித்தே தீரும் என்று அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-6-250-266)

## பல்கலை.மாணவர்களுக்கு 5 வாரகால வகுப்புத்தடை

(ரஜரட்ட)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் 13 பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 13 மாணவர்களுக்கே ஐந்து வார கால வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி ரஜரட்ட பல்கலைக்கழக துட்டுகெமுனு விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது காயமடைந்த எண்மர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மாணவிகள் விடுதிக்கு முன்னால் நின்று குடிபோதையில் சத்தமிட்ட சம்பவம் தொடர்பில் மாணவர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக ஒழுக்காற்று குழு நடத்திய உள்ளக விசாரணையில் 13 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (2)

# போர்க்குற்ற சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம்

## அமைச்சர் பீரிஸ் திட்டவட்டம்

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**



ஏபி செய்திச்சேவைக்கு இந்த கருத்தை நேற்றையதினம் வெளியிட்டுள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் மேற்கொள்ளும் விசாரணையை இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

வெளிநாட்டு செய்தியாளர்களுக்கான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் தீர்ப்பு ஒன்றை கொண்டிருப்பதால் அவரின் விசாரணைகள் நியாயமாக இருக்கும் என்று நம்ப முடியாது.

போர்க்குற்றங்களை சுமத்தியுள்ள நாடுகளே விசாரணைகளுக்கும் நிதியளிப்பதால் அது நியாயமாக இருக்காது.


இந் நிலையில் நவநீதம்பிள்ளை போர் முடிவடைந்த காலத்தில் இருந்தே இலங்கைக்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

இதேவேளை தமக்கு எதிரான சர்வதேச விசாரணையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று, இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மீண்டும் அறிவித்துள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் உருவாக்கப்படவிருப்பதாக கூறப்படும் சர்வதேச விசாரணை குழுவையும், இலங்கைக்குள் அனுமதிக்கப் போவதில்லை.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை, முற்றுமுழுதாக இலங்கையின் இறைமையை பாதித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)







கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கட்டடத் தொகுதி திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கட்டடத் திறப்புவிழா இடம் பெறுவதையும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலைக்கு காணி மற்றும் நிதி அன்பளிப்பு செய்பவர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங் கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சிக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரதான கூட் டணி கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி நாட்டின் அரசியல் சாசனத்திற்கு புறம்பான வகையில் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியல் சாசனத்தின் ஆறாம் திருத்தச் சட்டத்திற்கு புறம்பான வக்கயில் செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிநாடு ஒன்றை அமைக்கும் நோக்கில் இலங்கை தமிழ் அரசு கட்சி என்ற அரசியல் கட்சி உருவாக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

களனியின் பொல்ஹேன என்னும் இடத்தைச் சேர்ந்த எச்.கே.டொன் சந்திரசோம என்பவரே மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைக்குள் தனிநாடு ஒன்றை அமைப்பதனை இலக்காக கொண்டு தனிப்பட்ட நபர்களோ அல்லது அரசியல் கட்சிகளோ செயற்படக் கூடாது என அரசியல் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதி ராஜா, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் சட்ட மா அதிபா பாலித பெர்னாண்டோ ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட் டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாப்பில் தனிநாட்டு கோரிக்கை பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இந்தக் கட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மனுதாரர் உச்ச நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி வசந்தநாதன் இந்திராணி

கொக்குவில் மேற்கு, கொக்குவில் முதலியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தநாதன் இந்திராணி கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### திருமதி துரைராஜா சரஸ்வதி

அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுவிசை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா சரஸ்வதி கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு Krematorium St. Gallen Feldlistrasse 18a 9000 St. Gallen (SG ) Switzerlandஎன்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி ஜோசப் அன்னம்மா

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அன்னம்மா கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 12 ஆம்திகதி சனிக்கிழமை காலை8.30 மணிக்கு 4164 Sheppard Avenue East, Scarborough, ON M1S 1T3, Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

## அரசியலுரிமையை வென்றெடுக்கும் வகையில் அரசியல் தீர்வை உருவாக்குதல் வேண்டும்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

**(கொழும்பு) இலங்கையில் ஆட்சி நிர்வாகத்திற்கு ஏற்ற வகையிலான அரசியல் வியூகமொன்றினை உருவாக்காமையே, நாட்டு மக்களின் ஐக்கியத்தினை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு காரணம் என அமைச்சர் வாசுதேவ நாயணக்கார தெரிவித்துள்ளார்.**

தேசிய ஐக்கியத்திற்கான மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

மூவின மக்களின் உரிமைகளையும் வென்றெடுக்கும் வகையிலான அரசியல் தீர்வொன்றினை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

முப்பது வருட கால யுத்தத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாமல் போய்விட்டது. சிங்கள மக்களின் ஆதரவின்றி தமிழர்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பது கடினமென யுத்த முடிவில் தெரிந்து விட்டது.

மூவின மக்களையும் ஒன்றிணைத்து நாட்டில் ஐக்கியத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின், அதிகாரப் பகிர்வு முறைமையினை கையாள வேண்டும். தேசிய ஒற்றுமையினையும், மக்களின் ஐக்கியப்பாட்டினையும் உருவாக்க வேண்டியதொரு கால கட்டத்திலேயே நாம் இருக்கின்றோம்.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, சம உரிமைகளுடைய ஓர் சமூக கட்டமைப்பு மற்றும் ஆட்சி அதிகாரத்திற்கு ஏற்ற வகையிலானதொரு அரசியல் கட்டமைப்பினை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேற்கத்தேய காலனித்துவ கால கட்டத்தில் இலங்கையில் ஜனநாயகம் காணப்படவில்லை. மேற்கத்தேய வாதிகளின் அடிமைகளாகவே நாம் வாழ்ந்து வந்தோம். எனினும் இன்று அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. எனினும் பூரணமானதொரு சுதந்திரத்தினையும், ஜனநாயகத்தினையும் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல் இன்று எந்த மொழியில் ஆட்சி நடத்துவது என்ற சிக்கல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. தமிழ் மொழி மூலமான ஆட்சியொன்று வேண்டுமென்றொரு குரல் எழ ஆரம்பித்துள்ளது.

இது அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரியதொரு சவாலாகும். இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட வடக்கில் தமிழ் மக்கள் தமக்கானதொரு அதிகார பலம் வேண்டுமென குறிப்பிட்டு வருகின்றனர்.

உண்மையிலேயே அதிகாரப் பகிர்வினூடாக மாகாண சபைகளுக் கான அதிகாரங்கள் வழங்கப்படுவதினூடாகவே நாட்டில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட முடியும் என்பதே எனது கருத்து. இவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின் அநாவசியமாக சர்வதேச நாடுகள் எமது விடயங்களில் தலையிட தேவை ஏற்படாது.

மேலும் தனித் தமிழீழ மொன்றினை உருவாக்க வேண்டு மென்று விடுதலைப் புலி இயக்கம் முப்பது வருட காலம் போராடியும் அது பயனின்றி போய்விட்டது.

யுத்தத்தினால் தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது போயுள்ளது. இதனால் தமிழ் மக்களையும் ஐக்கியப்படுத்த முடியாது போய்விட்டது.

சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் தமிழ் மொழியினையும் தமிழர்கள் வாழும் பகுதியில் சிங்கள மொழியினையும் பரப்பி மொழி ஒற்றுமையினை ஏற்படுத்த வேண்டும். (2)

## முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட நான் தயார் ஹரேன் எம்.பி.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரேன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேரடி அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கத் தான் தயார் எனவும் அதற்கு கட்சியில் உள்ள அனைவரும் ஒன்று சேர வேண்டும் எனவும் அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர், தலைமைத்துவ சபை, சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பொறுப்பாளர்கள் ஒன்று சேர வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றம் அவசியம் எனவும் அதற்கு சஜித் பிரேமதாஸ தலைமைத்துவ சபையில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

## நாட்டின் மத வழிபாட்டு சிந்தனையில் வீழ்ச்சி

### அமைச்சர் திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை மாற்றமடைந்து வருகின்ற போதிலும், நாட்டின் மக்களிடையே மனிதாபிமானம் இல்லாமல் போயுள்ளது என கல்விச் சேவை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிராமப் பகுதிகளின் வீடுகள் அமைக்கப்படுகின்றன, வீதிகள் செப்பனிடப்படுகின்றன, விமான நிலையம் அமைக்கப்படுகின்றது, மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

மக்களை சமய வழிபாடுகளில் ஈடுபடச் செய்வது பௌத்த பிக்குகளின கடமையாகும். மக்களை நல்வழிப் படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வேறு எவராலும் முடியாது.

பிள்ளைகளை அறவழியில் நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியோ கல்வி அமைச்சரோ உணர்ந்து பயனில்லை, அதனை பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் மத வழிபாட்டுச் சிந்தனைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நாள் தோறும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை போன்ற பல்வேறு குற்றச் செயல்கள் பதிவாகின்றன.

பல பௌத்த பிக்குகள் இன்று மத சிந்தனைகள் பற்றி அறிவுரை வழங்காது, அரசியல் பேசி வருகின்றனர்.

நான் எல்லா பௌத்த பிக்குகளையும் குற்றம் சுமத்தவில்லை. எனினும், ஒருசில பௌத்த பிக்குகள் மத வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

**மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்**

நர்மிதா-6ஏ2சிஎஸ், சஞ்சிகா-5ஏபி2சிஎஸ், சிவகௌரினி-4ஏ2பிசி2எஸ்.

**யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

அ.சிந்துஜா-7ஏ2சி, கி.சிந்துஜா-3ஏ2பி2சிஎஸ்.

**வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்**

9ஏ

யோ.டிசாந், செ.கேசவன், ம.றனோஜன், வி.கனிஸ்ரன், அப்துல் அப்பாஸ்முகமட் அப்ரின், சி.வென்சாஹர், சி.அட்சயன், ஜெ.ஜெகநிரூபன், ப.அமிர்ததேச சர்மா, சி.றோசினி, செ.நிதுஷன், அ.அசான்.

ச.நிவேதன்-8ஏ எஸ், உ.ரமேஷ்வரன்-8ஏ பி, பி.என்.சுரேஷ் ரிசாந் பிரவீன்-8ஏ சி, கு.ஷட்சன் போல் ராஜ்-8ஏ பி, கு.பிரவீன்-8ஏ எஸ், ப.நிரூபன்-8ஏ எஸ், த.யதுசன்-8ஏ பி, பா.சஞ்சய் பிரதீப் அருண்-8ஏ பி, ப.வினோவிதன்-8ஏ பி, அ.சிந்துஜன்-8ஏ பி, உ.புருசோத்மன்-8ஏ பி, சி.துஷிகாந்-8ஏ சி, யோ. பிருந்தாபன்-8ஏ பி , சி.ஜதீஸ்கண்ணா-8ஏ பி, செ.லுதர்சனன்-8ஏ சி, சு.கோகிலன்-8ஏ பி, இ.மிலோஜன்-8ஏ பி, க.தனுசயன்-8ஏ பி, ர.லகீர்த்தன்-8ஏ பி, யோ. சுவர்க்கா-8ஏ சி,தேடிவித்திரா-8ஏபி.

**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**

ச.சுலோசனா -8ஏ சி, சு.டயானி-6ஏ2பிசி, செ.லோஜனா-6ஏ2 பி சி,அ.அனுராகவன் -6ஏ பி சி,வி.கயல்விழி-5ஏ 3பிசி. (2-250-266)

## ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைது

(ராகம)

ஹெரோயின் போதைப் பொருள வைத்திருந்த இரு சந்தேக நபர் களை ராகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான இருவரும் தந்தையும் மகனும் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 700 மில்லி கிராம் ஹெரோயின் கைப்ப ற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசார ணைகளை ராகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.நா. ஆலோசகர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலி

கொடுங்குற்றங்கள் மற்றும் போதை கட்டுப்பாடு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆலோசனை வழங்கி வரும் 2 அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சோமாலியா நாட்டிலுள்ள கல்கயோ விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

சோமாலியா நாட்டில் உள்ள புண்ட்லேண்ட் பகுதிக்கு அவர்கள் பயணித்தனர்.

அப்போது கல்கயே விமான நிலையத்தில் அவர்கள் தரையிறங்கியபோது அங்கு பாதுகாப்பு பணிக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒருவன் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்.

இதில் ஐ.நா. சபையின் ஆலோசகர்களான பிரிட்டனை சேர்ந்த ஒருவரும், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இன்னொருவரும் பலியானதாக புண்ட்லேண்ட் பிரதமர் அப்டிவெலி மொஹ்மத் அலி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு வீரர் ஒருவரும், அவரது சகாவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# உக்ரைனில் மே மாதம் ஜனாதிபதி தேர்தல்

## அந்நாட்டு இடைக்கால ஜனாதிபதி அறிவிப்பு

உக்ரைன் ஜனாதிபதி யானுகோவிச் தலைமறைவானதால் அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடத்த உக்ரைன் இடைக்கால அரசு திட்டமிட்டுள்ளது.

உக்ரைன் நாட்டின் கிழக்கில் உள்ள கர்கிவ் டோனட்ஸ்க் லுகன்ஸ்க் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு அலுவலகங்களில் புகுந்து ரஷ்ய ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சிலர் அலுவலக ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தனர். இதனால் உக்ரைன் இடைக்கால ஜனாதிபதி அலெக்சாண்டர் துருச்சியேவ் நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்தை கூட்டினார். இதன்போது உக்ரைன் ஜனாதிபதி யானுகோவிச் தலைமறைவானதால் அடுத்த மாதம் 25-ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்த உக்ரைன் இடைக்கால அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

# தலையீடுகளை நிறுத்துங்கள்

உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இல்லையேல் இரு நாடுகளின் உறவிலும் பெரும் பாதிப்பு ஏற்படும் என அமெரிக்காவிற்கு சீனா எச்சரித்துள்ளது.

ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள 2017 ஆம ஆண்டு பொதுத் தேர்தலில், சீனா ஆதரவு வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும் என அந்நாடு தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

ஹொங்கொங்கில் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்த கோரும் தலைவர்களான ஆன் சான்மற்றும்மார்டின்லீஆகியோர், கடந்த 4 ஆம திகதி வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஜோசப் பிடனை சந்தித்து பேசினார்கள்.

ஆனால் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சீனா தங்களது நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இல்லையென்றால் இருநாடுகளின் உறவிலும் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது.



கடந்த 1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் ஏற்பட்ட உள்நாட்டு போரில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இந்த சோக நிகழ்வின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது. ருவாண்டாவின் கிகாலி நகரில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் மற்றும் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி தாபோ எம்பேகி ஆகியோர் அஞ்சலி செலுத்துவதனை படத்தில் காணலாம்.

# ஆப்கானின் தேர்தலில் அப்துல்லா முன்னணியில்



(காபூல்)

காபூல் வாக்குசாவடிகளில் நடத்திய ஆய்வில் அப்துல்லா முன்னணியில் உள்ளார் என தெரிய வந்துள்ளது. ஆனால் இந்த முடிவை இவருக்கு அடுத்தபடியாக முன்னணி வகிக்கும் முன்னாள் நிதி அமைச்சர் அஷ்ரப் கானி அகமதுஷாய் மற்றும் ஷல்மை ரஸ்சூல் ஆகியோர் எதிர்த்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள கருத்தில்,

இந் நிலையில் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா முன்னணி வகிப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது. எனவே தேர்தல் முடிவை ஏற்கமாட்டோம் என தெரிவித்துள்ளனர். ஆனால் தேர்தல் நியாயமான முறையில் நடந்ததாகவும் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெறுவதாகவும் தேர்தல் கமிஷனின் செய்தி தொடர்பாளர் நூர்முகமது நூர் கூறியுள்ளார்.

வாக்கு எண்ணிக்கை நீண்ட நாட்கள் நடைபெறும். அதற்கான விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் அரசியல் சட்டப்படி 50 சதவீதம் வாக்குகள் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவர்.

அவ்வாறு கிடைக்காத பட்சத்தில் மே மாத தொடக்கத்தில் 2 ஆவது கட்ட தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிந்ததும் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. இப்பணி இம்மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறும்.

# எதிர்த்தரப்பினருடன் பேச்சில் ஈடுபட வெனிசுலா ஜனாதிபதி ஒப்புதல்

(காரகாஸ்)

எதிர்த்தரப்பு குழுவினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ ஒப்புதல் அளித்துள்ளார்.

தென் அமெரிக்கத்தூதர்கள் மேற்கொண்ட முயற்சியினை அடுத்தே பேச்சுவார்த்தையில் ஈடுபட அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.



தென் அமெரிக்காவின் எட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பு குறித்து தெரி விக்கும்போது மிக நீண்ட உரையாடலை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

அப்போதுதான் எதிர்த்தரப்பினரை சந்திக்க ஒப்புதல் அளித்ததையும் அவர் கூறினார்.

எனினும், எதிர்த்தரப்பினர் பின்வாங்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி மதுரோ அழைப்பு விடுத்தார்.

நிக்கோலஸ் மதுரோவைப் பதவியிறக்காமல் மாற்றத்தைக் கொண்டுவர எதிர்த்தரப்பினர் விரும்புகின்றனர்.

ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல தரப்பினரும் மதுரோவின் அரசை எதிர்த்து மிதமான மற்றும் தீவிர போராட்டங்களில் இறங்கியுள்ள போதிலும் இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் மதுரோவின் அரசை எதிர்ப்பவர்களில் ஒரு சிறு பிரிவினரே இடம் பெற ஒப்புக்கொண்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியா மற்றும் சீனா இளைஞர்கள் உலக பொருளாதாரம் குறித்து அறிய ஆர்வம்

## ஜனாதிபதி ஒபாமா

(வோஷிங்டன்)

இந்தியா மற்றும் சீனா இள்ளைஞர்கள் உலக பொருளாதாரம் குறித்து தெரிந்து கொள்வதில் ஆர்வமாக உள்ளனர் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கருத்து தெரிவித்துள்ளார்.


மேரிலாந்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு மாணவர்களிடையே உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்தியா மற்றும் சீனா நாட்டை சேர்ந்த இளைஞர்கள் இளம் அமெரிக்கர்கள் செய்வதை விட அதிகம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

இந்தியா மற்றும் சீனா இளைஞர்கள் , உலக பொருளாதாரம் குறித்து தெரிந்து கொள்வதில் ஆர்வமாகவுள்ளனர்.

நீங்கள் யாருக்கு எதிராக போட்டியி போவீநீர்கள். நீங்கள் எதையும் சாதிக்க முடியும் என நான் நம்புகிறேன். ஆனால் நம் முன்



னோர்கள் செய்ததை நாம் செய்ய வேண்டாம். நாம் புதிய விடயங்களையும் புதிய வழிகளை பற்றி சிந்திக்க வேண்டும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு மாணவனுக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும். நீங்கள் இந்த நாட்டை முன்னணிக்கு கொண்டு செல்ல பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொண்டர் தம் பெருமை
சொல்லவும் வேண்டுமோ!
-ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சமயம் கடந்து வழிபடவேண்டிய தவஞான யோகர் சுவாமிகள்

தவத்திரு யோகர் சுவாமிகள் எங்கள் மண்ணில் வாழ்ந்த தவஞானசீலர். அவரின் தவப் பொலிவையும் ஞான நல்லறிவையும் அறிந்தவர்கள் சுவாமிகளின் மீளாத் தொண்டர்களாக விளங்கினர்.

முக்காலம் உணர்ந்த ஞானியாகிய யோகர் சுவாமிகள்பால் நீதிபதிகள், அரச அதிபர்கள் என உயர்பதவி வகிந்தோரும் சாமானிய மக்களும் ஈர்க்கப்பட்டனர். உனது கடமையை தெய்வமாக மதித்து வாழ்ந்து காட்டு என்பதே சுவாமிகளின் அறிவுரையாக இருந்தது.

நல்லூர்க் கந்தன்மீது அளவற்ற பக்தி கொண்ட யோகர் சுவாமிகள், நல்லூர்த் தேரடியில் வீற்றிருந்த செல்லப்ப சுவாமிகளின் அருட் பார்வை கிடைக்கப்பெற்ற பேற்றினை "ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்..." என்ற திருப்பாடல் மூலம் செப்பி நிற்பார்.

சுவாமிகளின் ஞானத்திறத்தினை உணர்ந்தறிந்த வேற்றுநாட்டவர்களும், பிற சமயத்தவர்களும் யோகர் சுவாமிகளை நாடித் தேடி வந்து அவரின் தொண்டர்களாக வாழ்தலைப் பேறாகக் கருதினர்.

பிரித்தானிய ஆட்சியில் இலங்கையின் கடைசித் தேசாதிபதியாக இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன், யோகர் சுவாமிகளை தரிசித்து அவருக்குப் பணி செய்வதை பெரும் பேறாக கருதி வாழ்ந்தார்.

இதுபோல வெளிநாட்டவர்கள் பலர் இன்றும் யோகர் சுவாமிகளின் சீடர்களாக, அவரை வழிபடுகின்ற அன்பர்களாக பொதுநலத்தோடு வாழ்ந்து வரும் செய்திகளை அறியும்போது ஆனந்தக் கண்ணீர் மல்கும்.

அமெரிக்கா நாட்டின் ஹாவாயில் யோகர் சுவாமிகளின் பெயரால் இயங்கி வரும் ஆச்சிரமத்தின் பணிகளையும் அங்கு நிறைகின்ற தவத்திரு யோகர் சுவாமிகளின் பக்தர்களின் கூட்டத்தையும் நினைக்கும்கால்; எங்கள் மண்ணில் வாழ்ந்த தவஞானயோகியை மறந்தோமோ என்று நெஞ்சம் ஏக்கமுறும்.

அன்புக்குரியவர்களே! எங்கள் மண்ணில் நடமாடும் தெய்வமாக இருந்த யோகர் சுவாமிகள், "பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி" என்று பாடிய அந்தப் பாடல், எங்கள் மண்ணில் ஏற்படக் கூடிய அவல நிலைகளையும் அவற்றிலிருந்து நாம் மீள்வதற்கான வழி வகைகளையும் கூறுவதாக இருந்துள்ளதை இப்போது நாம் உணர முடியும்.

இன்று உலகம் முழுவதிலும் போற்றுதலுக்குரிய வானுறை தெய்வமாக வழிபடப் பெறும் தவத்திரு யோகர் சுவாமிகளின் 50ஆவது குருபூசை நாளைய தினமாகும்.

இந்த மண்ணில் நடமாடும் தெய்வமாக விளங்கிய யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை நிறைவில் நாம் அனைவரும் சமயம் என்ற எல்லைகளைக் கடந்து சுவாமிகளை மனத்தால், வாக்கால், காயத்தால் வழிபட்டு எங்களுக்கு மீட்சியை தாருங்கள் என்று சுவாமிகளின் பொற்பாதம் பணிவோம்.

உலகம் முழுவதும் சுவாமிகளின் திருநாமம் பேசப்படும் போது, அவர் பிறந்து வாழ்ந்த இத் திரு மண்ணில் அவரின் நாமத்தை பேசுவது எங்கள் வினை அறுக்க வல்லது.

ஆகையால் நாளைய தினம் யோகர் சுவாமிகளின் 50ஆவது குருபூசை தினத்தில் எங்கள் பிரார்த்தனை ஓங்கட்டும், ஒலிக்கட்டும் தவ யோகியின் குருவருள் பரிபூரணமாக எமக்குக் கிடைக்கட்டும்.

# அடேல் பாலசிங்கத்தை தூக்கிலிட வேண்டும்

## சிங்கள அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவில் வசிக்கும் அடேல் பாலசிங்கத்தை நாடுகடத்துமாறு இலங்கை அரசாங்கம் கோர வேண்டும் என்று வெளிநாடுகளில் வசிக்கின்ற சிங்களவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் ஆலோசகர் அனரன் பாலசிங்கத்தின் மனைவியான அடேல் பாலசிங்கம், தற்போது லண்டனில் வசித்து வருகிறார்.

அவரை இலங்கைக்கு அழைத்து அவரை தூக்கிலிட வேண்டும் என்று நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சிங்கள அமைப்புக்கள் கோரியுள்ளன.

இதன் மூலம் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பான சர்வதேசத்தின் பார்வையை திசை திருப்பமுடியும் என்று அந்த அமைப்புகள் ஆலோசனை வழங்கியிருப்பதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2)

# ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டபோது தி.மு.க. தடுக்கத் தவறிவிட்டது

## சாடுகிறார் தமிழக முதல்வர் "ஜெ"

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதை தடுக்க தி.மு.க. தவறிவிட்டது என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

அரக்கோணம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா பிரசாரம் மேற்கொண்டார். இதன்போது அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சாமானிய மக்களுக்கு எதிராக காங் கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது. அவர்களின் ஆட்சியில் மக்கள் எண்ணற்ற பிரச்சினைகளை சந்தித்துள்ளனர். காங்கிரஸ் தலைமையிலான மக்கள் விரோத ஆட்சியில் சில மாதங்களுக்கு முன்புவரை தி.மு.கவும் அங்கம் வகித்தது.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதை தி.மு.க தடுக்க தவறிவிட்டது. அதேபோல், காவிரி, முல்லை பெரியாறு விவகாரத்தில் தி.மு.க. மௌனம் காத்து தமிழர்களுக்கு துரோகம் இழைத்து விட்டது.

இருப்பினும், தமிழக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு செயறபடுத்தி வருகிறது. சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீட்டிற்காக தொடர்ந்து போராடி வரும் ஒரே இயக்கம் அ.தி.மு.கதான்.

எனவே, இந்த நலத்திட்டங்கள் தொடர அ.தி.மு.க வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்யுங்கள் என்றார். (2)

# கூட்டமைப்பினர் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொள்வர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விஜயம் செய்யவுள்ளனர்.

இந்தியாவின் உயர்மட்ட அரசியல் தலைவர்களுடன் சந்திப்பு நடத்தப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரான நிலைமைகள் குறித்து கூட்டமைப்பினர், இந்திய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தவுள்ளனர்.

உண்மை மறறும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்னாபிரிக்காவிற்கு இன்று விஜயம் செய்யவுள்ளனர். (2)

# அமிதாப் பச்சன் வாழ்த்து

(புதுடில்லி)

பங்களாதேஷில் நடைபெற்ற இருபது-20 உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட இலங்கை அணிக்கு இந்தி சுப்பர்ஸ்டார் அமிதாப் பச்சன் தனது வாழ்த்துககளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி சிறப்பாக விளையாடியதுடன் தனது இலக்கினை அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தனது சமூக வலைத்தளத்தில் கருத்து வெளியிட்ட அமிதாப் பச்சன், இந்தியா தோற்றது கவலையான விடயம்தான். எனினும் உலகின் ஏனைய அணிகளை விட சிறப்பாக விளையாடி இறுதி போட்டிக்கு தெரிவான எமது வீரர்கள் சிறந்தவர்கள்.

எம்மை வெற்றிகொண்ட இலங்கை அணியும் சிறந்த அணிதான். அதில் எமக்கு சந்தோஷமே. வாழ்த்துக்கள் ஸ்ரீ லங்கா என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

# 75 அடி பள்ளத்தில் லொறி வீழ்ந்து விபத்து

(கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற லொறி ஒன்று 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பு- ஹட்டன் பிரதான வீதியில், வட்டவளை பிரதேசத்திற்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் நடத்துநர் படுகாயத்துக்குள்ளாகி வட்டவளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின், மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதோடு, சாரதிக்கு பெரும் பாதிப்பு இல்லை என வட்டவளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# மாந்திராறு காட்டில் வெடிபொருட்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாகனேரி மாந்திராறு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட சில வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சட்டவிரோத வெடிபொருட்கள் நேற்று காலை கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மெகசீன்களும், ரி-55 ரக குண்டுகள் சிலவும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

# யோகாசன தியான வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் எதிர்வரும் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சி தினமும் காலை 6.15 மணியளவில் ஆரம்பமாகி 7.15 மணியளவில் நிறைவு பெறும். இப் பயிற்சி வகுப்பில் உடல் தளர்விற்கான யோகக் கிரியா, மூச்சுப் பயிற்சி, ஆசனங்கள், தியானம் போன்ற பயிற்சிகள் வழங்கப்படும். எனவே ஆர்வலர்கள் கலந்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பக்குவம் பெற்றால் துன்பமில்லை



✦ மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை. பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும்.

✦ இறைவனுடைய நியதியில், உலகில் உள்ள அனைத்து விடயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கை தான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது.

✦ பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல. ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போது தான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும்.

✦ மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போது கண்ணில் படும் வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம் மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும்.

✦ செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக் கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகி விடும். அதைப் போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விடயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி;

## மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழகம் சம்பியன்



மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணி



சுதுமலை வடக்கு இளைஞர் கழக அணி

சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் தொடர்ந்து 3 வருடங்களிற்கும் மேலாக சம்பியனாக இருந்த சுதுமலை வடக்கு இளைஞர் கழக அணியை வீழ்த்தி மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணி சம்பியனாகியது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுதுமலை வடக்கு இளைஞர் கழக அணியும் மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணியும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற சுதுமலை வடக்கு இளைஞர் கழக அணி முதலில் துடுப்பாடியது.


அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் தீபன் 17 ஓட்டங்களையும், சசிராஜ் 19 ஓட்டங்களையும், அஜந்தன் 7 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணி சார்பில் துவாரகன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 50 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணி துவாரகனின் அதிரடி கைகொடுக்க 4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அதிரடியாக துடுப்பாடிய துவாரகன் நான்கு ஆறுகள் அடங்கலாக 35 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தார்.

இப் போட்டியில் வென்றதன் மூலம் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு மேலாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளில் சம்பியனாகி வந்த சுதுமலை வடக்கு இளைஞர் கழக அணியின் தொடர் வெற்றிக்கு மானிப்பாய் கிழக்கு இளைஞர் கழக அணி முற்றுப்புள்ளி வைத்தது. (க-23)



பொன்னாலையில் இதுவரை பதிவு செய்யப்படாத விளையாட்டுக் கழகங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைவாக சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொன்னாலை விளையாட்டுக்கழகங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தொல்புரம் சிதம்பரம் அம்பலவாணர் சுவாமி முதலியார் அறங்காவலர் சிதம்பரநாதன் மற்றும் கழக செயலாளர் சிறி ரமணன் ஆகியோரிடம் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் வைத்து வழங்கபபட்டதனை படத்தில் காணலாம்.

## யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

செல்ரனின் சிறப்பாட்டம் மூலம் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றி பெற்றுள்ளது.

வருடா வருடம் நடைபெறும் யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்கிடையிலான 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி 29.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 116 ஓட்டங்களை பெற்றனர். அன்புஜன்-15, அமிர்தயன்-18, அகிலன்-29 ஓட்டங்களைப் பெற்றனர். யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி சார்ந்த எரிக் துஸாந்-03, கோகுலன்-02, மயூரன்-01 இலக்குகளை கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 16.3 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை பெற்றனர்.

ஜேம்ஸ்-25, எடின் ஆட்ட மிழக்காது 32, செல்ரன் ஆட்ட மிழக்காது 48 ஓட்டங்களை பெற்றனர். சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியை சார்ந்த பிருந்தாபன்-04 இலக்குகளை கைப்பற்றினார்.

இப்போட்டியில் சிறந்த வீரராக, யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியை சார்ந்த செல்ரன் தெரிவு செய்யப்பட்டார். (கு)







பருத்தித்துறை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












பங்களாதேஷில் நடைபெற்று முடிந்த 5-வது உலகக் கிண்ண இருபது-20 போட்டியில் வெற்றி பெற்று நாடு திரும்பிய இலங்கைஅணிவீரர்களை அமோகமாக வரவேற்கப்படுவதையும் ஜனாதிபதி வெற்றி பெற்ற வீரர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதையும் படங்களில் காணலாம்.

## சர்வதேச...

இந்த விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டாம் என தீர்மானித்துள்ளதன் காரணங்கள் பற்றியும் கொழும்பில் வெளிநாட்டு செய்தியாளர்களைச சந்தித்த பீரிஸ் விளக்கியிருந்தார்.

குறிப்பாக ஒரு நாட்டின் மீது விசாரணை செய்ய ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு சட்டத்தில் அதிகாரம் இல்லை என்பதை ஏற்கெனவே தாம் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த விசாரணை நியாயமான, நடுநிலையான விசாரணையாக அமையாது ஏனென்றால், இலங்கை மீது நடுநிலையாகவும் திறந்த மனதோடும் விசாரணை செய்யக் கூடியவராக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இல்லை என்று பீரிஸ் தெரிவித்தார்.

"சண்டைகள் நடந்து ஒரு வாரந்தான் ஆகியிருந்தபோதே, சர்வதேச விசாரணைகள் வேண்டும் என்று கோரியிருந்தவர் ஐ.நா மனித 'உரிமை ஆணையாளர். கொஞ்சக் காலத்துக்கு ஒருமுறை அவர் சர்வதேச விசாரணை வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அதுமட்டுமல்லாமல் பயங்கரவாதத்தை ஒழிப்பதாக கூறிக் கொண்டு சட்டவிரோத நடவடிக்கைகளை இலங்கை செய்துள்ளது என்று அவர் சொன்னார். அப்படியானால் இலங்கையில் பயங்கரவாதம் என்பதே இருந்திருக்கவில்லை என்று அவர் கருதுகிறார் என்றாகிறது. எனவே நடுநிலையாக திறந்த மனதோடு அவரால் இந்த விசாரணையை நடத்த முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை."

இது போன்ற காரணங்களுக்காகவே ஐ.நா மனித உரிமை ஆணையாளர் முன்னெடுக்கக்கூடிய விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைக்கப்போவதில்லை என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமை ஆணையகம் இப்படியான விசாரணைகளை நடத்த அதனிடம் நிதி இல்லை என்கிற சூழ்நிலையில், இலங்கை மீது குற்றம்சாட்டி தீர்மானத்தை கொண்டுவந்திருந்த நாடுகள் வழங்கக்கூடிய நிதியைக் கொண்டுதான் இந்த விசாரணை நடத்தப்படப்போகின்றன எனும் பட்சத்தில், அது எவ்வாறு நடுநிலையான ஓர் விசாரணையாக இருக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஐ.நா விசாரணையுடன் ஒத்துழைக்கப் போவதில்லை என்றாலும், இலங்கை அரசாங்கம் சுயமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளணிகளை முன்னெடுத்துவரும் மீள்குடியேற்ற நடவடிக்கை, சமாதான நடவடிக்கை மற்றும் நல்லிணக்க முன்முயற்சிகள் எல்லாம் தொடர்ந்து நடந்துவரவே செய்கின்றன என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

(மற்றுமொரு செய்தி உள்ளே...) (எ-11)

## தென்னா...

சர்வதேச விசாரணைக்கும் இந்த விஜயத்திற்கும் இடையே எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று அவர் குறிப்பிட்டார். கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி ஜேக்கப் சூமா, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேசி தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முன்வந்திருந்தார்.

இதன்விளைவாக அரச தூதுக்குழுவொன்று தென்னாபிரிக்கா சென்று திரும்பயிருந்தது.

மார்ச் மாதம் நடந்த ஜெனிவா மாநாட்டின பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னாபிரிக்கா சென்று பேச்சு நடத்துவதாக முன்கூட்டியே முடிவாகியிருந்தது.

அப்பேச்சுக்களுக்கான அழைப்பை தென்னாபிரிக்கா விடுத்திருந்த பின்னணியிலேயே, இன்று புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகள் ஆகியவை தொடர்பில் சகல விதமான விடயங்கள் பற்றி இந்த விஜயத்தின்போது பேச்சு நடத்தப்படும் என்று சம்பந்தன் தெரிவித்தார்.

ஐ.நா மன்றத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று அரசாங்கம் கூறியிருப்பது நல்ல முடிவல்ல என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்து மாற்றியமைக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். (எ-11)

## புனர்வாழ்வு...

செல்வராசா அன்ரன் இருதயராசா (32) அழகநாதன் வின்சன் மரியதாஸ் (45) றகப்பு மிக்கல்பிள்ளை (53) ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவிலுள்ள புலி உறுப்பினர்களிடம் நிதியினைப் பெற்றுட்றோலர் ஒன்றினைக் கொள்வனவு செய்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, வடக்கில் இவ்வாறான திடீர்க் கைதுகள் தினமும் இடம்பெற்று வருவதால் மக்கள் பீதியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## இரணைமடுத்...

எச்சரித்திருக்கிறார்.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விவசாயிகளுக்கு நிலக் கடலை விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதி விவசாயப் பணிப்பாளர் அ. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை முன்னெடுப்பவர்கள் இதன் பின்னால் அரசியல் இல்லை என்கிறார்கள். அல்லது அரசியலைத் தவிர்த்துவிட்டு அபிவிருத்தியை மாத்திரம் பாருங்கள் என்கிறார்கள். அரசியலை அகற்றிவிட்டு அபிவிருத்தியைப்பற்றி மாத்திரம் பேசுவதற்கு நாம் ஒன்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ அல்லது உதவி வழங்கும் நிறுவனங்களின் முகவர்களோ அல்ல, நாங்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாண அரசின் பிரதிநிதிகள்

மகாவலி அபிவிருத்தித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, விவசாயத்துக்கு நீர்ப்பாசனம் வழங்குவதும் மின்சக்தி பிறப்பிப்பதும் அதன் நோக்கங்கள் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. ஆனால் அதன் உள்ளார்ந்த நோக்கம் தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதாக இருந்தது. ஒப்புக்குக் குடியேற்றப்பட்ட சொற்ப தமிழ்மக்களும்கூட கால்வாயின் கடைக் கோடியில் குடியமர்த்தப்பட்டு முன்வாய்க் காலில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களையே தண்ணீருக்காகச் சார்ந்திருக்கச் செய்யப்பட்டார்கள்.

இதனால்தான் இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் தொடர்பாகவும் நாம் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது. இதன்மூலம் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றிவிடக்கூடாது, அதுமாத்திரம் அல்லாமல் எமக்கான உணவுற்பத்திக்காகவும், குடிநீருக்காகவும் தங்களை நாம் சார்ந்திருக்கவேண்டும் வேண்டும் என்ற அரசின் மறைமுக அரசியலுக்குள்ளும் நாம் மூழ்கிவிடக்கூடாது.

இவற்றின் அடிப்படையிலேயே இரணைமடுக்குளம் புனரமைப்பையும், குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகத்தையும் ஒருங்கிணைத்த திட்டமாக மேற்கொள்ளாது, தனித்தனித்திட்டங்களாகப் பரிசீலிக்கும்படி இதற்கு நிதியுதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். மாகாணசபை இவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கும் நிலையில், இத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கோருபவர்களின் பின்னால் உள்ள அரசியலைப் பொதுமக்கள் புரிந்து கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்சு.பசுபதிபிள்ளை, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சு.சிவகுமார், உதவி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் , வடக்கு விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் சி. அரசகேசரி, உலக உணவு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ச. பார்த்தீபன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (எ-6)

**தொழில் நுட்பப்பிரிவு**

**A/L - 2015, 2016**

விஞ்ஞானத்திற்கான தொழில்நுட்பம் - S.ஜெனா
பொறியியல் தொழில்நுட்பம் - ராம், ஜெனா
உயிரியல் தொழில்நுட்பம் - றோய்
தகவல் தொழில்நுட்பம் - சிவா

செயன்முறைகளுக்கான ஆய்வுகூட வசதிகளுடனான கற்பித்தல்

**DCM**

ஆரம்பம் :
12 - 04 - 2014
சனி 8.00 am

(சி-6978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sales Van For Sale**

Japan
Mazda - Np - PQ XXXX

நல்லநிலையில் உள்ளது. லீசிங் வசதி செய்து தரப்படும்.
தொடர்பு :- 0772820903, 0777190569

(6103)

## புலிகளின் நிதியில்...

பணம் அனுப்பப்பட்டு அந்தப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அது பிரபாகரனின் மூத்த சகோதரனின் பெயரில் பதியப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

நேற்று முன்தினம்யாழ் வடமராட்சி, பருத்தித்துறைமுனையில்கடலுக்குச்சென்று விட்டுத் திரும்பிய 05 மீனவர்களை கடற்கரையில்காத்து நின்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

அவர்கள் தொழிலுக்குச் சென்ற ட்றோலர் படகு குறித்தே இவ்வாறு கொழும்பில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. (எ-11)

## அரிசியின் விலை...

கின்றனர். இதன் பிரகாரம், 65 ரூபாயாக இருந்த ஒரு கிலோ நாட்டரிசியின் விலை 80 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 84 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## பொது பல சேனா...

பினர் கருத்துக்களை வெளியிட்டு வருகினறனர். வில்பத்து தேசிய பூங்காவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமை குறித்து தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

அரசாங்கம் மற்றும் சர்வதேச சமூகம், இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகங்களை மீள்குடியேற்றம்செய்ய முன்னுரிமை அளிக்கவில்லை.

உண்மையில், இரக்கமுள்ள முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த நன்கொடையாளர்கள் மூலம் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களுக்கு வீட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவை இலங்கையின் வெளிநாட்டு உதவிக்கான விதிகளை மீறிச் செயற்படுவதாக சில பௌத்த தீவிரவாதக் குழுக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அந்த வகையில், பொது பல சேனாவால் குழப்பம்மற்றும்மோசமான உணர்வுகள் ஏற்படுகின்றன என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், கடந்த வருடம் பௌத்த தீவிரவாத குழுக்களினால், முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக பகிரங்கமாக அறிக்கைகள் வெளியிட்டமையினை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

**புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு**

**ஞானோதய அக்கடமி**

**(சங்கத்தானை, சாவகச்சேரி)**

திறமையும், அனுபவமும் வாய்ந்த பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**A/L 2016**

கலை, வர்த்தக, தொழில் நுட்பப் பிரிவுகள்
ஆரம்பம் :- 10.04.2014 - At 8.00 (வியாழன்) am
நிர்வாகம்.

(C-6083)

**கனடா தேசத்தில் 6500 தொழிற்திறன் வேலைவாய்ப்புக்கள் (Skilled Workers)**

- மருத்துவ தாதியர், Civil Engineers, Computer Engineers (Hardware & Software) and Many More....
- துறைசார் பட்டக்கல்வி, 2 வருடங்களுக்குக் குறையாத முழுநேர தொழில் அனுபவம், **IELTS 5.0 (In Each Band)** அவசியம்!
- கனடாவில் உறவினர்கள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- **கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற நிபுணர் (Regulated Canadian Immigration Consultant - RCIC) ஊடான நேரடி 100% உத்தரவாத மான சேவை.**
- **முக்கிய குறிப்பு:** கனடா செல்ல விரும்புபவர்கள் அந்நாட்டு அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்கலாம் என்று கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு: **www.sikaram.lk**

(6973)

சிகரம் Sikaram Gateway to Education & Employment
**கல்வி - தொழில் வழிகாட்டி**
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
077 36 16 798, 021 222 00 11 www.sikaram.lk

- ALLIANCE FRANCAISE DE JAFFNA -

**Only Official FRENCH Centre.**

af **பிரெஞ்சு மொழி கற்பதற்கு** af Alliance Française de Jaffna

FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITZERLAND செல்பவர்கள், FRENCH கற்கவிரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள். (6098)

புதிய வகுப்புகள் விரைவில்... உடன் பதிவு செய்யுங்கள்...
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

**வலம்புரி** விளம்பர தொடர்புகளுக்கு...
021 321 0815, 021 567 1532

**சிறுவர்களுக்கான இலவச ஆங்கிலக் கற்கைநெறி**

ஆரம்பம் 09-04-2014 காலை 8.00 மணி

6-12 வயது வரையான சிறுவர்களுக்கான
இரு வாரங்கள் அடங்கிய முழுநேர கற்கை நெறி
கற்கைநெறி இறுதியில் சர்வதேச தர சான்றிதழ் வழங்கப்படும்
UK QUALIFILED ஆங்கில ஆசிரியர் K.KETHEES அவர்களின் கற்பித்தலில்

அதிரடி கட்டணக் கழிவுடன் A/L மாணவர்களுக்கான
**SPOKEN ENGLISH (03 Months)**
கற்கைநெறிக் கட்டணம் 3000/= மட்டுமே

**ELTC Studies (Pvt) Ltd.** கிளி/மத்திய கல்லூரி முன்பாக 077 074 3131
(C-6974)

**சிகரத்தின் புத்தாண்டுப் பரிசு**

UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Dubai என விரும்பிய நாட்டுக்கு Work Permit & PR வசதியுடன் செல்லும்
**முற்றிலும் புதுமையான - தனித்துவமான ஏற்பாடு!**

50,000/- வருமானத்துடன் வெளிநாட்டில் ஹொட்டேல் பயிற்சி பெற்று சர்வதேச தரச் சான்றிதழ் & 6 மாத தொழில் அனுபவத்துடன் விரும்பிய நாட்டுக்குச் செல்வதற்கான உத்தரவாதமான விசா, பயண ஒழுங்குகள்..

Airport Pick-up - ஹொட்டேல் பயிற்சி - தங்குமிடம்
Job Contract - Work Permit - VISA ஏற்பாடு
முழுவதையும் நாமே செய்து தருவோம்.

**உடனே இணைந்து உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்குங்கள்!**

Get Set for Careers @ சிகரம் Sikaram Gateway to Education & Employment & TakeOff your dreams
தொழில் திறன்களை வளர்த்து கனவுகளுக்கு இறக்கை கட்டுங்கள்

ஏப்ரல் 15க்குள் பதிவுசெய்து விசேட கட்டணக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி**
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Web: www.sikaram.lk
077 36 16 798
021 222 00 11

(6973)

**அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**



கோண்டாவில் திரு.இராசையா குவேந்திரநாதன் அவர்களினால் யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திற்கு அன்பளிப்பாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட ஆரம்பப் பிரிவுக்கான கட்டிடத் தொகுதி 06.04.2014 அன்று திறந்து வைக்கப்பட்டபோது அன்னாரின் சமூக சேவையைக் கௌரவித்து

**செங்கைப்புரவோன்**

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை வாழ்த்துவதோடு இன்று பிறந்தநாளைக் கொண்டாடும்
குவேந்திரநாதன் இரஞ்சினிதேவி தம்பதியினர் இருவரையும்
சகல சௌபாக்கியங்களுடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**விஷ்ரா விஷன்** உரிமையாளரும், ஊழியர்களும்.

**மணிவிழா வாழ்த்து**



06.04.2014 அன்று சிறந்த கல்விக் கொடைக்காகவும், சமூக சேவைக்காகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம் பிள்ளையினதும் பேராசிரியரும் வணிகத்துறை தலைவருமான திரு. க. தேவராசா அவர்களினதும் கரங்களால்

**செங்கைப்புரவோன்**

என்னும் கௌரவப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட கோண்டாவில் மண்ணின் தலைமகன், மணிவிழா நாயகன் இராசையா - குவேந்திரநாதன் அவர்களின் மணிவிழா (09.04.2014) சிறப்புறவும் இன்னும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் வாழ் மக்கள்
கோண்டாவில்.

(C-6971)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.